அதிகாரம் 5

# நம் பிரதான ஆசாரியன் கிறிஸ்து

## (பகுதி 2)

### ஆரோன் மீது பிரதான ஆசாரியனாக கிறிஸ்துவின் மேன்மை (4:14-5:10)

### (தொடர்ச்சி)

**பிரதான ஆசாரியனின் பங்கு (5:1-4)**

**1அன்றியும், மனுஷரால் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காக தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான். 2தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான். 3அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியதாயிருக்கிறது. 4மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை.**

பண்டைய யூதேய சமயத்தில் பிரதான ஆசாரியத்துவத்துடன் இணைந்திருந்த முழு வல்லமை, மகிமை, ஆடம்பரம், சிறப்பு, மற்றும் மதிப்பை இன்று கற்பனை செய்வது கடினம். ஜொஸிஃபஸின் மதிப்பீட்டில், இந்த அதிகாரம் அனைத்து மரியாதையிலும் மிக உயர்ந்ததாக இருந்தது.[1] ஜேம்ஸ் பர்டன் காஃப்மேனின் பின்வரும் விளக்கம் உதவியாக உள்ளது:

> யூத பிரதான ஆசாரியரின் பூமிக்குரிய சிறப்பு குறிப்பாக யூத பின்னணியிலிருந்த கிறிஸ்தவர்களில் கவர்ச்சியான தாக்கத்தை

ஏற்படுத்தியது என்பதில் சந்தேகம் இல்லை. அவனது ஆடம்பர ஆடைகள், அலங்கரிக்கப்பட்ட மார்ப்பதக்கம், பாவநிவிர்த்தி நாளன்று மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கான தனிச்சிறப்பு, நீதிபதியாகவும் நியாயசங்கத்தின் தலைவராகவும் அவனது நிலைமை, யூத தேசத்தின் அதிகாரபூர்வ பிரதிநிதியாக அவனது வியத்தகு செல்வாக்கு, இன்னும் குறிப்பாக ஒரு நேரத்தில் அவர்களுக்கு ராஜா இல்லாதிருந்த போது, ஆரோனுடைய குமாரர்களிலிருந்து மீண்டும் அனைத்து வழியில் யாத்திரையை அடையும் அதிகார பாரம்பரிய வம்சாவளி மரபு, அதிகாரத்திற்கு ரோம வெற்றியாளர்கள் கொடுக்கும் விரும்பத்தகாத மரியாதை, இவை அனைத்தும் மற்றும் பலவும் மக்களுடைய பார்வையில் யூதருடைய பிரதான ஆசாரியனின் தனித்துவமான சிறப்பை நிலைநாட்டின.[2]

யூதர்கள் பொதுவாக ஏரோதுவை வெறுத்த போதிலும், சாலொமோனின் நாட்களிலிருந்தே நிகரற்ற அழகான ஆலயத்தை புனரமைத்த அவனது வேலையைப் பாராட்ட அவர்கள் மனமின்றி முன்வந்தார்கள். பிரதான ஆசாரியனுக்கு வழங்கிய மரியாதை ஆலயத்தின் கௌரவத்துடன் இணைக்கப்பட்டது.

இயேசுவின் அப்போஸ்தலர்கள் ஆலயத்தை அவர்களைப் போல அவர் மகிமைப்படுத்த விரும்பினார்கள் (மத். 24:1, 2). பிரதான ஆசாரியனைப் பற்றிய அப்போஸ்தலர்களின் மாற்றுக் கண்ணோட்டம், அவர்கள் இயேசுவுடனேகூட இருந்து கொண்டு இருந்திருந்ததால் மட்டுமல்லாமல் ஆவியானவர் மூலம் ஒரு அதிகாரமளிப்பு வழியாகவும்தான் கொண்டுவரப்பட்டது. பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வல்லமை பெற்றதால், கலிலேயாவிலிருந்த பன்னிருவரும் நியாயப்பிரமாணம் சிலுவையோடு சென்று விட்டது என்ற சத்தியத்தைத் தழுவிய விசுவாசத்தில் அவர்களின் புதிய நம்பிக்கையைப் பாதுகாக்க தலைமை ஆசாரியனுக்கும் அவனது நீதிமன்றத்திற்கும் முன்பாக நிற்க விரைவில் போதுமான அளவு தைரியம் பெற்று வளர்ந்தார்கள் (அப். 1:6-8; 2:1-4; 4:13). அவர்கள் மோசேயின் முறைமை குறித்த ஒரு புதிய கண்ணோட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

பிரதான ஆசாரியனுக்கு என்ன பங்கு நிறைவேற்ற இருந்தது? "மகா பிரதான ஆசாரியரான" இயேசுவை சம்பந்தப்படுத்தி அந்த பாத்திரத்தை நாம் பார்ப்போம்.

**வசனம் 1.** மனுஷரால் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் **பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காக தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான் என்ற வார்த்தைகளுடன் இந்த அதிகாரம் தொடங்குகிறது.** ஒரு ஆசாரியனின் தேவை, தேவனிடமிருந்து மனிதனைப் பிரிக்கிறதைத் தெரிவிக்கிறது. தேவனை அடைவதில் நமக்கு ஒரு சிக்கல் இருக்கிறது: அந்தப் பிரச்சனை பாவம், இது

தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது (ஏசாயா 59:1, 2). ஒரு கருத்தில், எல்லா கிறிஸ்தவர்களும் தேவனின் ஆசாரியர்கள் (1 பேதுரு 2:5, 9). வேறொரு கருத்தில், நாம் பிதாவை வணங்கவும், அவருடைய இரக்கத்தைப் பெறவும். அவருடனான முழுமையான அணுகலை நமக்கு அனுமதிக்க ஒரு பிரதான ஆசாரியன் நமக்கு வேண்டும். தேவனை அறிந்து அவருடன் ஒரு உறவை வைத்திருக்கும் மேலும் நமது குறைபாடுகளை புரிந்துகொள்கிற ஒரு விண்ணப்பம் பண்ணுகிறவன் நமக்குத் தேவை, நம்முடைய பிரதான ஆசாரியரும் மத்தியஸ்தருமாகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர, நாம் தேவனோடு நேரடியாகத் தொடர்பு வைத்திருக்க முடியாது.

பிரதான ஆசாரியன் **பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்த வேண்டும்**. 5:1-4-ல் பிரதான ஆசாரியரையும் அவருடைய வேலையையும் பற்றிய தகவல்கள் நிகழ்காலத்தில் உள்ளன. அவரால் வழங்கப்பட்ட சபையின் சேவைகள் இன்னமும் கிடைக்கின்றன. ஆனாலும், அந்த வழிபாடு முறைக்கு இனிமேல் அவசியமில்லை, ஏனென்றால் அதன் கீழ் செய்யப்படும் அனைத்து பலிகளும் இயேசுவில் நிறைவேறின. எனவே, அவைகள் நிரந்தரமாக நீக்கப்பட வேண்டும்.

யூத விசுவாசிகள் தங்கள் பிரதான ஆசாரியனுடன் இணைத்த கிட்டத்தட்ட அவசியமான மரியாதைக்குரிய பாத்திரத்தை கிறிஸ்து எவ்வாறு மாற்றினார் என்பதை கிறிஸ்தவர்கள் அறிந்திருந்தார்கள். நியாயப்பிரமாணம் கொடுத்ததைவிட மிகவும் விஞ்சி இருந்த பரலோகத்திற்குரிய பிரதான ஆசாரியத்துவதைதை வழங்குவதன் மூலம் இயேசு சாதாரண, மனித பிரதான ஆசாரியத்துவத்தை முறியடித்தார் என்று அவர்கள் பார்க்க வேண்டியதாய் இருந்தது.

**வசனம் 2**. பூமியிலுள்ள பிரதான ஆசாரியன் மக்கள் மத்தியில் இருந்த மனிதனாக இருந்தான். பாவத்திற்கு பலிகளைச் செலுத்தவிருந்தவன், **அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப் போனவர்களுக்கும்** இரங்கத்தக்கவனாய் இருக்க வேண்டியிருந்தது (விவாதத்தை 5:3 இல் காண்க). ஆரோனின் குடும்பத்தில் இருந்து ஆசாரியர்கள் வந்தார்கள் (யாத். 29:9); பிரதான ஆசாரியன் தெரிந்துகொள்ளப்பட்டு, அழைக்கப்பட்டு, தேவனால் நியமிக்கப்பட்டு இருக்க வேண்டியவனாக இருந்தான்.

ஒரு அனுதாபமான மனித இயல்பும் ஒரு திவ்விய நியமனமும் ஒரு பிரதான ஆசாரியனின் இரண்டு அடிப்படை பண்புகள். ஆசாரியத்துவத்திற்கான அவ்விரண்டு தகுதிகளையும் இயேசு பெற்றிருந்தார் என்று எபிரெயர் விளக்குகிறது. நாம் துன்பப்படுத்தும்போது அவர் துன்பப்படுகிறார் (4:15). அவர் அனைத்து ஆசாரியர்களுக்குள்ளும் மிகவும் கருணையுள்ளவர். அவர் நம்மைப் புரிகிறார் ஏனெனில் அவர் பாவம் இல்லாமல் இருந்தார், அவர்

“வஞ்சனையான கவர்ச்சியையும் நுட்பமான பரிந்துரைகளையும்” எப்போதும் எதிர்கொண்டவர்.[3]

5:1-10 பெரிய சூழலில், எபிரெயர் இயேசுவின் பிரதான ஆசாரியத்துவத்தின் உண்மையையும், இந்த நிலைப்பாடு வெளிப்படுத்திய முக்கிய நிகழ்வுகளையும் விவரிக்கிறது: தோட்டத்தில் அவரது ஜெபம், அவரது சிலுவையின் மரணத்துடன் உச்சக்கட்டம் அடைந்தது. எபிரெயர் 7:1-10:18 அவருடைய ஆசாரிய ஊழியத்தின் இயல்பு பற்றி விரிவாக விவரிக்கிறது. புதிய ஏற்பாட்டின் வேறு எந்த புத்தகமும் இயேசுவைப் பிரதான ஆசாரியராக இவ்வளவு தெளிவாக வெளிப்படுத்தவில்லை.

இயேசு தேவனால் மனிதனின் நன்மைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, நியமிக்கப்பட்ட பிரதான ஆசாரியராவார், வெளிப்படையாக, அவர் தேவனுடைய வேலையைச் செய்ய தேவனால் தேர்வு செய்யப்பட்டு, அவர் பூமியில் இருக்கும்போது தனது பணியை நிறைவேற்றினார் (யோவான் 17:4). அவர் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், தேவனால் நியமிக்கப்பட்டவருமாக இருந்தார். பிரதான ஆசாரியத்துவம் உடன்படிக்கையின் முக்கிய அங்கமாக இருந்ததால் இது இல்லாமல் யூத அமைப்பு, ஒன்றும் செய்ய முடிவதில்லை. அந்த நிலைப்பாட்டை வைத்திருந்த மனிதன் கிறிஸ்துவின் ஒரு வகையைப் போன்றே செயல்பட்டதால் அதுவும் இன்றியமையாதது; அவருடைய செயல்பாடுகள் கிறிஸ்தவ யுகத்தை முன்னிலைப்படுத்தின.

**வசனம் 3.** அப்பொழுது, பிரதான ஆசாரியர்கள், **அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியதாய் இருக்கிறது.** எபிரெயரின் ஒரு கருத்து பலிகளைச் செலுத்துதல் (பார்க்க 5:1). προσφέρω (*ப்ரோஃபெரோ*, “பலி செலுத்துதல்”) என்ற வார்த்தை எபிரெயரில் இருபது முறைகள் தோன்றுகிறது.[4] பவுலின் எழுத்துக்களில் இந்த வினைச்சொல் வடிவம் எங்கும் காணப்படவில்லை, என்றாலும் அவன் கிறிஸ்துவின் பலியைப் பற்றி கூறி இருக்கிறான். எபிரெயரில் இந்தக் கருத்து பெரும்பாலும் ஆசாரியர்களின் வேலைக்கும், பிரதான ஆசாரியருக்கும் பொருந்துகிறது, என்றாலும் மூன்று சந்தர்ப்பங்களில் இது கிறிஸ்துவின் வேலைக்கு பொருந்துகிறது (9:14, 25, 28).

குறிப்பாக பாவ நிவாரண நாளன்று ஆசாரியர்களும், குறிப்பாக பிரதான ஆசாரியரும், “பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும்” செலுத்தினார்கள். வழங்கப்படும் “காணிக்கைகள்” உயிரற்றவைகளாக இருந்தன (எண்ணெய் மற்றும் உணவு வழங்கல்கள்) “பலிகள்” மிருக பலிகள்-அடிக்கப்பட்ட மிருகங்கள் ஆகும்.[5] ஆசாரியத்துவத்தின் உண்மையான இயல்பு பலிகளைச் செலுத்துதலாகும், ஆனால் இயேசு நம்முடைய பிரதான ஆசாரியனாக செயல்பட்டு தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார்.

சுவிசேஷ ஊழியரை இந்த அர்த்தத்தில் “ஆசாரியன்” என்று அழைக்க வேண்டாம் ஏனென்றால் அவன் எந்த பலியையும் கொடுக்கவில்லை, எந்த இரத்தத்தையும் தெளிக்கவில்லை. ஒரு நியமிக்கப்பட்ட ஆசாரியனால் சொல்லப்பட்ட வார்த்தைகளால் “திருவிருந்து” (ரொட்டி) “இயேசுவின் அதே உடல்” எனக் கூறிக்கொண்டு ரோமன் கத்தோலிக்க சபை குருக்கள் தொடர்ந்து “திருப்பலி” யில் பலிகளைச் செலுத்துவதாக நம்புகிறது. எனினும், இத்தகைய கண்ணோட்டம் தேவனுடைய வார்த்தையால் கற்பிக்கப்படவில்லை. சுவிசேஷ ஊழியர்கள் வார்த்தையைப் பிரசங்கிக்கிறார்கள். அவர்கள் பாவத்திற்காக பலி செலுத்துவதில்லை, ஏனென்றால் கிறிஸ்து பாவத்திற்காக ஒருமுறை அனைத்து காலங்களுக்காகவும் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார்.

அவர்களுடைய பாவ பலவீனங்களால், பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் தங்களுக்காகவும் அதேபோன்று மக்களுக்காவும் பலிகளைச் செலுத்தினர். பல பண்டைய யூத எழுத்துக்களில் பிரதான ஆசாரியர்களின் புகழ்பெற்ற ஆடைகள் பற்றிய விளக்கங்கள் உள்ளன, ஆனால் அவனது உண்மையான உடையே அவனுடைய “பலவீனம்” ஆகும்.[6] தானே பாவமுள்ளவனாக அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான் (வசனம் 2).[7] அவன் தீர்ப்பில் மிகவும் கடுமையாக இருக்கக்கூடாது என்பதற்காக அவனுக்கு இரக்கம் தேவைப்பட்டது. “கனிவு” என்ற வார்த்தைக்கு “இரக்கத்துடன்” என்று பொருள். இங்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க வினைச்சொல் μετριοπαθέω (*மேத்ரியாபதையொ*) ஆகும். கிரேக்கர்களுக்கு, இது மிகுந்த கோபத்திற்கும் உணர்ச்சியின்மைக்கும் நடுவில் ஏற்புடையதான நிலையை - சரியான அளவு உணர்ச்சியினைக் குறிக்கிறது.

பிரதான ஆசாரியராக கிறிஸ்து பலவீனமே இல்லாமல் இருந்தபோதிலும், நமது பலவீனங்களுக்காக அவர் அனுதாபப்படுகிறார் (4:15; 7:28). “துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்” (ஏசாயா 53:3). அவர் ஒவ்வொரு வகையிலும் பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியருக்கு மேலாக, குறிப்பாக இரக்கத்தை வெளிப்படுத்துவதில் சிறந்து விளங்கினார். ஏவப்பட்ட எழுத்தாளனால் 2:18 இலும் 4:15 இலும் விளக்கப்பட்டிருப்பது போல், அறியாதவர்களிடம் இயேசு கனிவாக நடந்துகொண்டார்.

பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியர்களைப் பற்றிய தாமஸ் ஹெவிட் உரை பொருத்தமானது: “ஆகையால், தேவையற்ற தீவிரத்தைத் தவிர்க்க வேண்டியது அவனுக்கு அவசியம், ஏனென்றால் அவன் அதே தீர்ப்புக்கு உட்பட்டவன்; இன்னும், தேவனின் பிரதிநிதியாக, அவன் மிகவும் மென்மையாக இருக்க முடியாது, தேவன் ஒருபோதும் பாவத்தைக் கண்டுகொள்ளாதவர் அல்ல.”[8]

அறியாமல் செய்த பாவங்களுக்காக நியாயப்பிரமாணம் இரக்கம் பெற ஏற்பாடு செய்து, பாவத்தை ஒருவன் அறியாதிருந்தபோது இரக்கம் செலுத்தப்பட்டது (லேவி. 4:1-12; 5:14-16; 15:27-29). எனினும், வேண்டுமென்றே முரட்டாட்டத்தில் பாவம் செய்தவர்களுக்காக எந்தவொரு உண்மையான ஏற்பாடும் இல்லை (பார்க்க எண். 14:29-31; 15:30, 31; ஒப்பிடுக எபி. 10:26-29). அறியாதவர்களுக்கும், அவர்கள் இழந்த நிலைமையை அறிந்திருக்காவிட்டாலும் கூட தண்டனை வருகிறது (பார்க்க லூக். 12:47, 48). இருப்பினும், "கிறிஸ்துவே விரும்பிய மற்றும் விருப்பமில்லாத எல்லா பாவங்களுக்காகவும் பரிகாரியாகிறார்."[9]

"அறியாமையினால்" யூதர்கள், அறியப்படாத ஏதோவொன்றிற்கு மேல் குறிப்பிடுகிறார்கள்: "அவர்கள் தவறுதலாக செய்த அல்லது அவைகளின் குறிப்பிட்ட தன்மையைத் தெரியாமல் செய்த பாவங்களைச் சேர்த்துக்கொண்டார்கள். அவர்கள் பேராசையினால் செய்த அல்லது பெரும் சலனத்தினால் ஒரு கணத்தில் செய்த பாவங்களையும் உட்படுத்தினார்கள்."[10]

ஒரு பாவம் "அறியாமை" யிலிருந்து உண்டானதா இல்லையா என்பதை தேவன் மட்டுமே தீர்மானிக்க முடியும். கர்த்தருடைய அற்புதங்களைக் கண்டிருந்த யூதர்கள் இன்னமும் "தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்" என்று வகைப்படுத்தலாம் என்பதை புரிந்து கொள்ள நமக்குக் கடினமாக இருக்கலாம் (லூக். 23:34), ஆனால் இயேசு அவர்களை "அறியாதவர்கள்" பிரிவில் வைத்தார். தேவனால் வழங்கப்பட்ட வழிகளால் அவர்கள் இன்னும் மன்னிக்கப்பட முடியும். இயற்கையாகவே, மனந்திரும்புதல் அவசியம். "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கர்த்தரைச் சிலுவையில் அறைந்தவர்கள் பேதுருவைக் கேட்டபோது அவன் அறிவித்தது இதுதான் (அப். 2:36-38).

ஆரோன் தனக்காகவும் மக்களுக்காகவும் பலிகளைச் செலுத்த வேண்டியிருந்தது (லேவி. 9:7; 16:11, 17). கிறிஸ்துவின் மேன்மையை இதில் காணும்போது அவர் தம் சொந்த பாவங்களுக்காக பலி செலுத்த வேண்டியதில்லை (எபி. 5:3; 7:27), அவருக்கு பாவம் ஒன்றும் இல்லை (1 பேதுரு 2:21, 22; பார்க்க ஏசாயா 53:9).

**வசனம் 4.** ஆரோனைப்போல **தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை** என்று எழுத்தாளன் தொடர்ந்தான். பிரதான ஆசாரியன் ஒரு திவ்விய அழைப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பிரதான ஆசாரியராக தேவனுடைய நியமனத்தை இயேசு ஏற்றுக்கொண்டார். அவர் தன்னால் அல்லது மனிதனால் தேர்ந்தெடுக்கப்படவில்லை; அவர் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த சிந்தனை அந்த நாளில் பெரும்பாலும் ஏரோதுவால் அல்லது

ரோம அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட விரோதமான பிரதான ஆசாரியர்களுக்கான சற்று மறைமுகமான கடிந்து கொள்ளுதலாக இருந்திருக்கலாம்.[11] அவர்கள் சில சமயங்களில் அதிகாரத்தை அடைவதற்காக லஞ்சத்தை வழங்கினார்கள், அநேகர் தங்கள் ஊழலைப் பற்றி குறிப்பிடப்பட்டார்கள். முந்தைய நாட்களில் உண்மையான பிரதான ஆசாரியர்களோடு இது நிகழ்ந்திருக்கவில்லை. சிலர் மிகவும் தைரியத்தையும் நேர்மையையும் காட்டினர், தாவீதுக்கு உதவி செய்ததில் அபியத்தார் செய்திருந்தது போல (1 சாமு. 23:9-14). கோத்திரத்தின் தலைவனாக இருந்த ஆரோன், குறைந்தபட்சம் ஒரு பகுதியான அவனுடைய நல்ல குணத்திற்காகவும் மோசேக்குள்ள உறவுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம்.

தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பிரதான ஆசாரியன், தகுதியில்லாமல் ஆசாரியர்களாகப் பணியாற்ற முயன்றவர்களுக்கான தண்டனையால் கற்பிக்கப்பட்டார்கள். ஆசாரியர்களாகச் செயல்பட முயன்று கடுமையாக தண்டிக்கப்பட்ட மூவரைப் பற்றி எண்ணாகமம் 16:1-35 கூறுகிறது. ஒரு ஆசாரியனாகச் செயல்பட சவுல் தன்னைதானே “கட்டாயப்படுத்தி” (1 சாமு. 13:12) உரிமை கோரினான், ஆனால் அவன் இறுதியில் தனது வாழ்க்கையையும் இராஜ்யபாரத்தையும் இழந்தான். உசியா ராஜா ஆலயத்தில் தூபம் காட்ட முயற்சித்தான், அவன் தொழுநோயால் தண்டிக்கப்பட்டான் (2 நாளா. 26:16-21).

“தேவனால் அழைக்கப்படும்” தேவை இன்றும் சபைகளில் உள்ள பிரசங்கிகள் அல்லது மூப்பர்களின் தேர்வுடன் ஒன்றும் செய்வது இல்லை. இது இப்போது பாசாங்கு செய்கிற சில “உள் உணர்வு அழைப்புடன்” ஒன்றும் செய்வது இல்லை. அப்போஸ்தலர்களின் நாட்களில், மூப்பர்களும், நற்செய்தியாளர்களும் பரிசுத்த ஆவியினால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டனர் என்று, அப்போஸ்தலர் 20:28-ல் கூறப்பட்டிருக்கிறது (மேலும் பார்க்க அப். 6:1-7; 13:1-3).[12] மூப்பர்களுக்கான ஆவிக்குரிய தராதரங்கள் 1 தீமோத்தேயு 3:1-7 மற்றும் தீத்து 1:5-9 ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆவியின் தேவைகளை சந்திக்க மனிதர்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது, அவர்கள் அதிகாரத்திற்கு நியமிக்கப்பட்டார்கள். அதே நடைமுறையை சபைகளில் தொடர்ந்து இன்றும் பின்பற்ற வேண்டும்.

ஆரோனின் பிரதான ஆசாரியத்துவத்துடன் கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்தை ஒப்பிட்டு எந்த மனித ஆசாரியனுக்கும் மேலான கிறிஸ்துவின் ஊழியத்தின் சிறப்பையும் மேன்மையையும் காண்பிக்க வேண்டும். அவர் நமது மத்தியஸ்தர், நமது பரலோக அனுதாபி, நமது பாவத்திற்கான இறுதி பலி, மேலும் நமக்கு ஊழியம் செய்ய தேவனால் நியமிக்கப்பட்டவர். விசுவாச அறிக்கையைப் பற்றிக்கொண்டு நமக்கிருப்பதில் நாம் சந்தோஷப்படுவோம்.

**நம்முடைய பிரதான ஆசாரியராக கிறிஸ்துவின் தகுதிகள் (5:5-10)**

**5அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார்.**
**6அப்படியே வேறொரு இடத்திலும்: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார்.**
**7அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு,**
**8அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு,**
**9தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி,**
**10மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்.**

5:5-10ல், வேத வசனங்களில் நாம் எப்போதாவது காணும் கிறிஸ்துவின் மகத்துவத்தின் மிகச்சிறந்த சித்தரிப்பை நாம் காண்கிறோம். இந்த சித்திரத்தை சிந்தித்து பார்த்து அதை ஆராய்வோம்.

**வசனம் 5.** நாம் பார்க்கும் முதல் சத்தியம் கிறிஸ்து தம்மைத்தாமே உயர்த்தவில்லை என்பதுதான். **கிறிஸ்து தம்மைத்தாமே மகிமைப்படுத்தவில்லை**, என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம், ஒருவேளை எழுத்தாளன் சமீபத்தில் தங்களைத்தானே நியமித்த அல்லது அதிகார செல்வாக்கு மூலம் அவர்கள் நியமனம் செய்ய ஏற்பாடு செய்த ஆசாரியர்களுக்கான மற்றொரு நுட்பமான விமர்சனத்தை வழங்கினார்.

4 மற்றும் 5 வசனங்களில், “மகிமை” மற்றும் “கனம்” ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டைக் காண்கிறோம். “கனம்” (வசனம். 4) பிரதான ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்டது, ஆனால் “மகிமை” கிறிஸ்துவுக்கு வழங்கப்பட்டது (வசனம் 5). என்று எழுத்தாளன் கூறினான். இரு சொற்களும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன என்றாலும், “மகிமை” “கனத்தை” விஞ்சுகிறது. “மகிமைப்படுதல்” என்பது ஒருவர் திவ்விய சமுகத்தில் நுழைவதன் மூலம் “கனத்திற்கு” அப்பாற்பட்டவராகிறார் என்ற கிறிஸ்துவைப் பற்றிய ஒரு உண்மை, அவரை உயர்த்துவதன் வழியாக நிறைவேற்றப்பட்டது. ஒருவேளை அநேக யூதர்கள் இயேசுவை அரச உரிமைக்கு ஒரு பாசாங்கு செய்பவராக நினைத்திருப்பார்கள், ஆனால் விசுவாசிகளுக்கு அவர் தாவீதின் குமாரன், மேசியா.

“கிறிஸ்து,” அல்லது “அபிஷேகம் பண்ணப்பட்டவர்,” என்ற சொல் 5 வது வசனத்தில் தனது அதிகாரத்தின் சிறப்பு நியமனத்தைத் தெரிவிக்க

பயன்படுத்தப்படுகிறது. வெளிப்படையாக, ஒரு தனித்த “அபிஷேகம் பண்ணப்பட்டவர்” (கிறிஸ்து) என்பது நோக்கமாகும். ஒருவர் இராஜாவாகவும், மற்றொருவர் ஆசாரியராகவும் சேவை செய்வார் என இரண்டு அதிகாரங்களையும் கொண்ட இரண்டு மேசியாவின் வருகையை சில யூதர்கள், எதிர்பார்த்தார்கள்.[13]

சங்கீதம் 2:7 இல் இருந்து ஒரு மேற்கோள் - **நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்** - என்பது எபிரெயர் 1:5 இல் கிறிஸ்துவின் குமாரத்துவத்தைத் தெரிவிப்பதற்காக உபயோகிக்கப்பட்டுள்ளது. இதே மேற்கோள் 5:5 இலும் அவர் தனது கனமான ஊழியத்திற்குத் திவ்வியமாக நியமிக்கப்பட்டார் என்பதை சுட்டிக்காட்ட உபயோகிக்கப்பட்டுள்ளது. யோவான் 8:42 இல் இயேசு தம்மை உயர்த்தியதாக இயேசு கூறினார். அவர் தனது சொந்த புகழைத் தேடவும் இல்லை, அல்லது அவரது சுய மரியாதையை உயர்த்த வேண்டிய அவசியமும் இல்லை. அவர் பரலோகத்தில் இருந்து கொண்டே மகிமையையும் கனத்தையும் தக்க வைத்திருக்க முடியும், ஆனால் அவர் அந்த உறைவிடத்தை விட்டு, பூமியின் கீழானோருக்காக தாழ்மையான கீழ்ப்படிதலுடன் அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலானார் (பிலி. 2:5-11). கிறிஸ்துவின் குமாரத்துவம் லூக்கா 3:38 இல் உள்ள ஆதாமின் பண்பிற்கு அப்பாற்பட்டது; ஏனென்றால், அவர் திவ்விய குமாரன், ஆதாம் வெறுமனே மனிதனாகவும், வீழும் தன்மை உடையவனாகவும் இருந்தான். பிந்தையவன் பாவம் செய்வதைத் தெரிந்து கொண்டு உலகில் மரணத்திற்குக் காரணமானான்; முந்தையவர் கீழ்ப்படிதலைத் தெரிந்து கொண்டு, அதை ஏற்றுக்கொள்கிற அனைவருக்கும் நித்திய ஜீவனின் தந்தையானார்.

**வசனம் 6.** இயேசுவை குமாரன் என்று அறிவித்த அதே சத்தம், **மெல்கிசேதேக்கின் முறைமையின்படி, என்றென்றைக்கும் ஆசாரியர்** என்றும் அடையாளப்படுத்தியது. இந்த வசனம் சங்கீதம் 110:4 இல் உள்ள அறிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. எபிரெயரில் முதல் முறையாக, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான மேசியாவின் ஆசாரியத்துவம் பற்றிய கருத்து எழுப்பப்பட்டுள்ளது. மெல்கிசேதேக்கின் முறைமையின்படி கிறிஸ்து தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் ஆசாரியராக நியமிக்கப்பட வேண்டும் என்று பிரச்சாரம் செய்யவில்லை.

வசனங்கள் 5 மற்றும் 6 உண்மையில் சங்கீதங்களில் இருந்து மூன்று மேற்கோள்களைக் கொண்டிருக்கின்றன. சங்கீதம் 110:1 இல் “கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்” என்பது 2:7 மற்றும் 110:4 க்குப் பாலமாக செயல்படுகிறது. கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறி, மகிமை அடைந்ததைக்

குறிப்பதற்கு ஆரம்பகால சபையினர் சங்கீதம் 110:1ஐ அடிக்கடி பயன்படுத்தினர். இருப்பினும், இந்த தனிப்பட்ட குமாரனும் எதிர்பார்த்திருந்த ஆசாரியரும் ஒருவரே.தான். "அவர் மேலும் கூறியிருக்கிறார்" என்பதில் உள்ள "அவர்" (வசனம் 6) என்பது தெளிவாக தேவனைக் குறிக்கிறது. மேலும் அவர் அதிகாரத்துடன் குறிக்கப்படுகிறார். சங்கீதம் 110 வழக்கமாக கிறிஸ்தவர்களால் ஒரு ஆதார உரையாக பயன்படுத்தப்பட்டது மற்றும் யூதர்களால் பொதுவாக மேசியாவினுடையதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.[14] எனினும், எபிரெய எழுத்தாளன் முதன் முதலாக "குமாரன்" மற்றும் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தை கிறிஸ்துவுடன் அடையாளப்படுத்தியதாகத் தெரிகிறது.[15]

"என்றென்றைக்கும்" என்பது பரிபூரணத்தை குறிக்கிறது, இது மேம்படுத்தப்பட முடியாது. எனவே, கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் ஆரோனின் பழைய ஆசாரியத்துவத்தைப் போல மாற்றி அமைக்க வேண்டியதில்லை. பழைய ஏற்பாட்டில் "என்றென்றும்" என்ற வார்த்தை பெரும்பாலும் "காலம் நிறைவேறும்போது" என்று பொருள் தருகிறது. யாத்திராகமம் 12:14 பஸ்காவை "நித்திய" நியமமாக ஆசரிக்க வேண்டும் என்று தெரிவிக்கிறது (KJV). பின்னர் ஓய்வுநாளும் "என்றைக்கும்" ஆசரிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. (யாத். 31:16, 17; KJV). ஆரோனின் ஆசாரியத்துவம் "நித்தியமானது" (KJV), ஆனால் இந்த பதம் "தலைமுறைதோறும்" என்ற வெளிப்பாட்டிற்கு தகுதி உடையதாய் இருக்கிறது (யாத். 40:15).[16] கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் கிறிஸ்தவ யுகத்தில் முழுவதும் நீடிக்கும். பின்பு, அவர் ராஜ்யத்தை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பார். அதன்பின், அவர் தந்தையிடம் நமக்காகத் தொடர்ந்து பரிந்து பேசமாட்டார் எனத் தெரிகிறது (1 கொரி. 15:24-28). நிச்சயமாக, கிறிஸ்துவின் பிரதான ஆசாரியத்துவம் மற்றும் ராஜாவாக மத்தியஸ்த ஆட்சி இனிமேல் அவசியமில்லை. பரலோகத்தில் இனி பாவம் இல்லை; இதன் விளைவாக, நமக்கு இனி பாவநிவாரண காணிக்கையோ அல்லது இயேசு நமக்காக பரிந்து பேசவோ அவசியமில்லை (வெளி. 21:27; எபி. 7:25).

**வசனம் 7.** கிறிஸ்து இன்னும் பூமியில் இருக்கையில், **அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்தார்.** 5:5-10 இல் அவருடைய மகத்துவத்தின் சித்தரிப்பான கிறிஸ்துவைப் பற்றிய இரண்டாவது உண்மையாவது அவர் வல்லமையுடன் ஜெபித்தார். 4:14-16 இல் கிறிஸ்தவர்கள் ஜெபிக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள். வசனம் 7 ஜெபத்தின் மிகச் சிறந்த முன்மாதிரியை நமக்கு அளிக்கிறது. கிறிஸ்து நம்முடைய சார்பாக தம் உயிரை அளித்தபோதிலும், அவர் இந்த ஜெபங்களை தமக்காகவே ஏறெடுத்தார். இது "பாவிகளாகிய நம்மேல் இரக்கமாயிருக்கிறாரா?" என்ற கேள்விக்கு பதில் கூற தொடங்குகிறது. "மாம்சமும் இரத்தமும்"

பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது (1 கொரி. 15:50), மற்றும் கிறிஸ்துவின் மகிமை அடைந்த சரீரம் அவர் பூமியில் கொண்டிருந்த மாம்ச பெலவீனம் மற்றும் தளர்ந்த நிலையில் இருந்து இப்போது விடுவிக்கப்பட்டுள்ளது (பிலி. 3:21). எப்படி அவர் - இப்போது பரலோகத்தில், அவருக்குப் பின்னால் உள்ள அவருடைய துயரங்களுடனும் துன்பங்களுடனும் - நமக்காக இன்னும் “இரக்க உணர்வு” கொள்ள முடியும்? அவர் “இரத்தத்தின் பெருந்துளிகளாக மாறின” வேர்வையை அனுபவித்தபோது இருந்த (லூக். 22:44), அவருடைய வாழ்க்கையின் மிகுந்த சோதனையான இரவை முழுமையாக நினைவில் கொண்டுள்ளார் என்பது அதற்கான பதிலாகும். வசனம் 7 மனிதகுலத்தின் சார்பாக மரிப்பதற்கு ஆயத்தமான பொழுது, கடைசியாக வேதனை அடைந்த கெத்செமனேயில், அவர் அனுபவித்த பாடுகளைக் குறிக்கிறது. அவர் மனிதர்களில் ஒரு மனிதராக வாழ்ந்து, அந்த நாட்களின் நினைவை முழுவதுமாக வைத்திருந்தார்.

பிரியமான மற்றும் இரக்கமுள்ள வைத்தியனாகிய லூக்., கிறிஸ்துவின் அனுபவத்தை “வேதனை” (ἀγωνία, *அகோனியா*; 22:44) என்ற வார்த்தையை பயன்படுத்தி கெத்செமனேயில் உள்ள துன்பங்களை விவரித்தான். இந்த ஒருமுறை மட்டுமே *அகோனியா* என்ற வார்த்தை கிறிஸ்துவின் அனுபவத்தைக் குறிக்க பயன்படுத்தப்பட்டது; சிலுவை சம்பந்தமாக இது காணப்படவில்லை. “உலகின் இரட்சகருடைய மகா வேதனையும், அதே போல அவரது துன்பத்தின் பல வேறுபட்ட அம்சங்களும் நம்முடைய இந்த வாழ்வில் எப்பொழுதும் ஒரு மர்மமாகவே இருக்கும்”[17] என்று தாமஸ் ஹெவிட் கூறினார். ஒருவேளை இது உண்மை, ஆனால் நாம் அந்த தோட்டத்தில் அவருடைய இரவு நேர பிரார்த்தனை பற்றிய சில கருத்துகளை நாம் ஆராய்வோம்.

1. இயேசு பயந்ததினால் ஜெபித்த பொழுது, தேவனுடைய திட்டத்திற்கு கீழ்ப்படிந்தார். இயேசு அந்தத் தோட்டத்தில் பயந்தார், ஆனால் அது வெட்கக்கேடானது அல்ல. அவரது பயம், நம் மீது அவர் அதிகமான இரக்க உணர்வு கொண்டு இருக்கிறவராக அவரைப் பார்க்கச் செய்கிறது. நமது சார்பாக இத்தகைய வேதனையைச் சகித்துக்கொள்ளும் அவருடைய விருப்பத்தால் நாம் ஆழமாக தொடப்பட்டிருக்கிறோம். தேவன் அவருடைய ஜெபத்திற்கு பதில் அளித்திருந்த போதிலும், மரணத்தின் “பாத்திரம்” இயேசுவை விட்டு நீக்கப்படவில்லை.[18] இயேசு பேதுருவிடம் அவர் அதைப் “பானம் பண்ண வேண்டும்” என்று குறிப்பிட்டார் (யோவான் 18:11), மேலும் அவர் அவ்வாறு செய்யத் தயாராக இருந்தார். எனினும், அவர் அந்தத் தோட்டத்தில் கிட்டத்தட்ட மரணத்தின் தருவாயில் “ஆழ்ந்த துக்கத்தில்” இருந்தார். வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான் (மத். 26:38; லூக். 22:43). நமது ஜெபங்கள் பதில்

அளிக்கப்படாத நிலையில் இருப்பதாகத் தெரியும்போது அல்லது நம்முடைய சோதனைகளின் மர்மத்தை நாம் விளக்க முடியாதபோது, கெத்செமனேயில் அவரது பாடுகள், அவரை விட்டு நீக்கப்படாத அவரது மரணத்தின் "பாத்திரம்" நமக்காக இரக்க உணர்வு கொள்ள அவரை மேலும் தகுதி உள்ளவராகச் செய்கிறது.

**தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு** என்று வசனம் 7 கூறுகிறது. சில மொழிபெயர்ப்புகள் "பயபக்தி" என்பதை "பயம்" (KJV) அல்லது "தெய்வ பயம்" (ASV) என்பதாக வழங்குகின்றன. இங்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள இந்த வார்த்தை சர்வ சாதாரணமானது அல்ல φόβος (*ஃபோபோஸ்*), ஆனால் εὐλάβεια (*யுலாபெயா*), எபிரெயுவில் புதிய ஏற்பாட்டில் மட்டும் பயன்படுத்தப்பட்ட சொல் ஆகும் (காண்க 12:28, அங்கு அது "பயபக்தி" என்று வழங்கப்பட்டுள்ளது).

அவரது இதயத்தை நிரப்பிய தெய்வ பயம் வெறுமனே மரணத்தின் பயம் மட்டுமே அல்ல; அவ்வாறு இருந்தால், மற்ற பரிசுத்தவான்கள் வெளிப்படையாக அவரைவிட அதிக தைரியத்துடன் மரித்திருக்கிறார்கள். அவரது பயம் "பயபக்தியுள்ள பயம்," அது, அவரது பிதாவிற்கு முழுவதுமாக கீழ்ப்படிவதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த வார்த்தை "பதட்டம்" என்றும் பொருள் தருகிறது. "பதட்டம் என்ற ரீதியில் புரிந்து கொண்டால், இந்த கூற்று இயேசுவின் குறிப்பிட்ட பயம் மரணத்தின் அச்சம் என்று அர்த்தம் தருகிறது, அவர் கேட்கப்பட்டபோது, இந்த பயத்தை அவர் சமாளிக்க முடிந்தது"[19] என்று ஜேம்ஸ் தாம்ஸன் எழுதினார். "வசனம் 7ஐ இலக்கணரீதியாக மொழிபெயர்ப்பது சாத்தியம்: '... கேட்கப்பட்டபோது பயத்தில் இருந்து விடுவிக்கப்பட்டான்'"[20] என்று ரேமண்ட் பிரவுன் தெரிவித்தார். இந்த பகுதியின் இந்த புரிதலுடன் பிலிப்பியர் 4:4-7 இல் பவுல் கற்பித்தபடி நமது பதட்டம் நீக்கப்படுவது சாத்தியமே என்பதற்கு ஒரு முழுமையான எடுத்துக்காட்டாகிறது. அவரை கிட்டத்தட்ட மூழ்கடித்திருந்த தற்காலிகமான பதட்டம், பிதாவாகிய தேவனிடம் திருப்பி விடப்பட்டு, உடனடியாக நீக்கப்பட்டது.

பாவத்தின் சுமையுடன் மரிப்பது ஒரு பெரிய பொறுப்பு, அதைத்தான் மனிதகுலத்திற்காக அவர் செய்திருந்தார். அவரது மரணம் - கர்த்தருக்கும் கூட, அவரது மனித உருவில் - கிட்டத்தட்ட ஒரு பெரும் பணியாகும். அவர் சிலுவையை அடைவதற்கு முன்பு, சோதனைகள் மற்றும் போராட்டங்களை எதிர்ப்பதற்கு அவரது முழு திறமையும் அந்தத் தோட்டத்தில் பரீட்சிக்கப்பட்டது.

அவர் சிலுவைக்கு வருவதற்கு முன்பு, அந்தத் தோட்டத்தில் அவரது "பயம்" மரணத்தில் கவனம் செலுத்தியது என்றால், நமது பாவங்களுக்கான பலியாக சிலுவையில் மரிக்கின்ற அவருடைய பிதாவின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பே அவர் மரித்து

இருந்திருக்கலாம். மத்தேயு 26:38ல் அவர் நினைவுகூர்ந்து, "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது" என்று கூறினார். இயேசு தம்முடைய நிலைமையை நன்கு அறிந்திருந்தார், அவரை அதில் நிலைநிறுத்த தம்முடைய பிதாவிடம் கேட்டுக் கொண்டார்.

2. இயேசு தனிமையாக உணர்ந்ததால் அவர் ஜெபித்தபோது, அவர் மற்றவர்களுக்காகவும் அக்கறை கொண்டிருந்தார். அவருடைய சிலுவையின் மீதான போராட்டத்தை எதிர்கொள்வதற்காக, பிதாவினால் தனியாக விடப்பட்டிருப்பதை இயேசு ஏற்றுக் கொள்ள முடிந்தது (மாற்கு 15:34; சங். 22:1 இலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது). அவர் வேதனையினால் அழாமல் சகித்துக் கொண்டார் - அப்படிப்பட்ட குறைந்தபட்சமான அழுகை குறிப்பிடப்படவில்லை. பதிலாக, மற்றவர்களின் தேவைகளுக்கான அக்கறையை அவர் வெளிப்படுத்தினார். அவர் மரித்துக் கொண்டிருந்த ஒரு திருடனுக்கு உறுதியளித்து, பிதாவிடம், "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று கெஞ்சினார் (லூக். 23:34, 43).

அதேபோல, அவரது சரியான நேரத்தில் நமது கவலைகளை அகற்றுவதற்கு, நாம் விசுவாசத்திலும் ஜெபத்திலும் தேவனை அனுமதித்து சகித்துக் கொள்ள வேண்டும். துன்பமானது மனிதகுலம் அனைத்தும் அனுபவிக்க வேண்டிய ஒரு பகுதியாக இருக்கிறது. வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்பட்டபோது அவருடைய பசியை ஆற்ற, அற்புதமான வழிமுறைகளை பயன்படுத்த கிறிஸ்து மறுத்துவிட்டார், அவரை சிலுவையில் ஆணி அறைகின்ற எதிரிகளிடமிருந்து அவரை விடுவிப்பதற்காக தேவதூதர்களை வரவழைக்க மறுத்துவிட்டார்.

3. இயேசுவின் ஜெபத்திற்கு பதில் அளிக்கப்பட்டபோது அவர் பலப்படுத்தப்பட்டார். இயேசுவின் பலத்த சத்தம் "கேட்கப்பட்டது." எருசலேமுக்காக செய்தது போல இயேசு அடிக்கடி கண்ணீர் விட்டு அழுதார் (லூக். 19:41). லாசரு மரித்ததிலிருந்து அவனை அவர் விரைவில் உயிரோடு எழுப்புவார் என்று அறிந்திருந்தும், லாசருவின் கல்லறையில் அவர் அழுதார் (யோவான் 11:35). இந்த தோட்டத்தில் இருந்த இயேசுவின் அழுகை நமது இயல்பைப் பற்றிய அவருடைய புரிதலை நிரூபிக்கிறது. அவருடைய அழுகை வல்லமை உள்ளது. மனிதகுலத்திற்காக அவர் பாடுபடவும் அவருடைய சரீரத்திலே சிலுவையின் மேல் மரணமடையவும் பலப்படுத்தப்பட்டார் (2 கொரி. 5:19-21).

இயேசு கேட்கப்பட்டார், ஏனெனில் அவர் தேவதூதனின் உதவி மூலம் பதில் அளிக்கப்பட்டு, வேதனையுடன் செய்த ஜெபத்தைச் சகிப்பதற்காக பலப்படுத்தப்பட்டு அதன் மூலம் அவரது பதட்டம்

அல்லது பயத்தை வென்றார். பின்னர் அவர் நமக்காக மனப்பூர்வமாகச் சிலுவைக்குச் சென்றார். “கேட்கப்பட்டார்” என்னும் வெளிப்பாடு அவரது ஜெபத்திற்குப் பதில் அளிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.[21] முதலாவதாக, ஆரம்ப விண்ணப்பத்திற்கு உடனடியாக தேவதூதன் வந்தான் (லூக். 22:43), பின்னர் அடுத்ததாக, வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாக விழும் வரை ஜெபித்துக் கொண்டிருக்கும் அனுபவம் வந்தது (லூக். 22:44). இந்த சந்தர்ப்பத்தில் இயேசு “திகிலோடும் மிகவும் வியாகுலத்தோடும்” இருந்ததை மாற்கு விவரித்தான் (மாற்கு 14:33). “என் இதயம் துக்கத்தால் நொறுங்க தயாராக உள்ளது” என்று NEB கூறுகிறது, மேசியாவின் தீர்க்கதரிசனமான சங்கீதம் 69:20 இல் உள்ள “நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது; நான் மிகவும் வேதனைப்படுகிறேன்” என்பதற்கு ஒரு நேரடி விளக்கத்தைத் தருவதாகத் தெரிகிறது: சங்கீதம் 69:21 இல் உள்ள “கசப்பு” மற்றும் “காடி” பற்றிய ஒரு தீர்க்கதரிசனம், சுவிசேஷ விளக்கங்களில் உண்மையில் சொல்லர்த்தமாக நிறைவேறியது போலவே பார்க்கப்பட்டது, ஆகவே, அதே வழியில் வசனம் 20ஐ புரிந்து கொள்ள நாம் ஏன் தயங்குகிறோம்? ஒரு நொறுங்கின இதயத்துடன் இயேசு சிலுவையில் மரிப்பதற்காக, கெத்செமனேயில் அடைந்த துன்பம் அவரை மிகவும் பலவீனப்படுத்தியது. கொல்கொதாவுக்குச் செல்லும் வழியில் சிலுவையின் பாரத்தினால் கீழே விழுந்ததில் ஆச்சரியமில்லை! அவருடன் சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளுடன் ஒப்பிடுகையில், கல்வாரியில் அவர் விரைவில் மரித்து விட்டார் என்பதில் ஆச்சரியமில்லை! இந்த நேரத்தில் அவருடைய பலவீனம் போர்ச்சேவகர்களையும் கூட்டத்தினரையும் பரியாசம் செய்யத் தூண்டுவதாகத் தெரிந்தது, மிகவும் பலவீனமாக இருந்த ஒருவர் எப்படி தங்கள் இராஜாவாக இருந்திருக்கலாம் என்பதை அவர்கள் பார்க்கவில்லை! தோட்டத்தில் அவரது அழுகையின் ஜெபத்தையும் அவரை பலப்படுத்துவதன் மூலம் வந்த பதிலையும் தொடர்ந்து, அந்த இரவின் போராட்டத்திற்கும் அடுத்த நாள் அவமானத்திற்கும் எந்த முணுமுணுப்போ அல்லது முறையீடோ இல்லாமல் இயேசு செல்ல முடிந்தது. உண்மையில், அவர் தம்மை அணுகி அழைத்தவர்களுக்காக ஜெபம் செய்தார்! அந்தத் தோட்டத்தில் இருந்தபோது “புரிந்து கொள்ளச் செய்யும் சமாதானத்தை” அவர் புதுப்பித்தார். அவர் யூதாஸையும் கலகக்கார கும்பலையும் தைரியமாக எதிர்கொண்டார்.

அவர் சிலுவைக்கு ஆயத்தமாக இருந்தபோது, இயேசு எதை சகித்துக் கொண்டார்? ரே சி. ஸ்டெட்மென் இதைத் தெளிவாக விவரித்துள்ளார்:

> பாவத்தினால் உருவாகும் உணர்ச்சிவயப்பட்ட துயரங்களை இயேசு எதிர்கொண்டார் என ஆசிரியர் குறிப்பிடுகிறார்: அதன் அவமானம், குற்ற உணர்வு மற்றும் மனமுறிவடைதல். அவர்

> பாவத்தினுடைய அடிமைப்படுத்தும் ஆற்றலான, இரும்புப்பட்டையை உணர்ந்தார். நம்பிக்கையற்ற தன்மையாலும், முழுமையான சோர்வினாலும் மற்றும் முழுமையான தோல்வியாலும் அவர் ஒடுக்கப்பட்டார். அவர் பிதாவினால் கைவிடப்பட்டு சிலுவையில் அறையப்படும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார், ஏனென்றால் அதன்பின் அவர் உலகத்தின் பாவத்தைத் தனது சொந்தமானதாக சுமப்பார். இந்த நினைவு அவரது இதயத்தை திராட்சை ஆலையில் உள்ளதைப் போல நசுங்கச் செய்தது.[22]

இயேசு அடைந்திருந்த வேதனையை நாம் முழுவதுமாக கற்பனை செய்ய இயலாது. கிட்டத்தட்ட சமாளிக்க முடியாமல் இருந்தவற்றைச் சகித்துக் கொண்டார் - தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சி, அப்போது மரிக்காமல், ஏனென்றால் அவருடைய "தெய்வபக்தியுடனான சமர்ப்பித்தல்" (வசனம் 7; NIV). இயேசுவின் ஜெபத்திற்கு பதில் அளிக்கப்பட்டது ஏனென்றால், எந்தவொரு அன்பான தகப்பனாலும் தாங்க முடியாத - அவருடைய ஆழ்ந்த அழுகையுடன் அவர் பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிய முழுவதுமாக ஆயத்தமாக இருந்தார். அவரது ஜெபத்திற்கு "ஆம்" என்று பதில் அளிக்கப்பட்டது. அவரால் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை பாதுகாப்பிற்காகப் பெற்றுக் கொள்ள முடியும், ஆனால் வேதவசனம் நிறைவேற வேண்டியதாக இருந்தது (மத். 26:53, 54; காண்க லூக். 24:44-48). அந்த முழு விழிப்புணர்வுடன், மனவிருப்பத்தோடு அவர் சிலுவைக்குச் சென்றார்.

4. கிறிஸ்துவைப்போல நாம் ஜெபம்பண்ணும்போது, நாம் கேட்கப்படுவோம். இயேசுவின் "பலத்த சத்தம்" கேட்கப்பட்டதால், நாமும் துன்பத்தின் மூலமாக கற்றுக் கொண்ட நமது கண்ணீரின் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும்வரை நமக்கு எந்த உத்தரவாதமும் இருக்கிறதா? வேறு எதுவும் கொண்டிராத வல்லமையைக் கண்ணீர் பெற்றுள்ளது - தெளிவாக, தேவனிடமும் கூட. பி. எஃப். வெஸ்ட்கோட் ஒரு பழைய யூத சொல்லை மேற்கோளிட்டுள்ளார்: "கண்ணீர் கடந்து செல்லாத எந்த வழியும் இல்லை."[23] ஒவ்வொரு வீட்டிலும் அவைகள் காணப்படுகின்றன, தேவன் அவைகளைக் கேட்கிறார். ஒவ்வொரு சவாலுக்கும் நாம் சமமாக இருக்கவும் தேவனுடைய இரக்கத்தினால் அதைத் தாங்கிக் கொள்ளவும் நாம் ஜெபிப்போம். மற்றவர்களுக்கான நமது ஜெபம், ஆழ்ந்த கவலையுடன் செய்யும்போது, நிச்சயமாக பதில் அளிக்கப்படும்.

நமது ஆண்டவர் கூட அதைத் தவிர்க்க தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தவில்லை என்னும் போது, நாம் மரணத்திலிருந்து அற்புதமான விடுதலையைப் பெறுவோம் என்று எதிர்பார்க்கக் கூடாது! இந்த வழியாக மட்டுமே அவர் மனிதனை காப்பாற்றுவதற்கு, தேவனுடைய கனிவான போக்கினை நிலைநிறுத்த முடியும். கிறிஸ்து நமக்கு எதைச் செய்தார் என்பதைப் பொறுத்து, நாம் ஒரு பெரிய

பேரழிவை தவிர்க்கிறோம். இயேசு மனம் உவந்து கீழ்ப்படிந்ததால், நாம் கொண்டுள்ள சில மகத்தான நன்மைகளின் சுருக்கம் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

> கிறிஸ்துவின் பாவநிவாரண வேலை, மரணம் மற்றும் பாதாளத்தின் மீதான வெற்றியின் காரணமாக, பாவத்தின் பாரத்தையோ, சாபத்தின் தீவிரத்தையோ, நியாயத்தீர்ப்பின் தண்டனையையோ அல்லது நித்திய மரணத்தையும் நரகத்தையும் நாம் ஒருபோதும் அறியமாட்டோம். நாம் நமது பிரதான ஆசாரியனாகிய இயேசுவால், விடுவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருக்கிறோம்.[24]

**வசனம் 8. அவர் குமாரனாயிருந்தும்** பட்டபாடுகளினாலே **கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு** என்பது 5:5-10-ல் கிறிஸ்துவுடைய மகத்துவத்தின் சித்தரிப்பில் அவரைப் பற்றிய மூன்றாவது சத்தியமாகும். கிறிஸ்து கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது என்பது கேட்பதற்கு விசித்திரமாக இருக்கிறது! அவர் எந்த இடத்திலாவது முரட்டாட்டம் செய்தார் என்று பொருள் கொள்ள முடியாது. ஒரு குழந்தையாகக்கூட, அவர் ஒவ்வொரு விதத்திலும் கீழ்ப்படிந்தார் (லூக். 2:51). "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்று அவர் கூறினார் (யோவான் 4:34). "உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" என்று அவர் பிதாவிடம் ஜெபம் செய்தார் (யோவான் 17:4). அவர் எப்போதும் கீழ்ப்படிதலுடன் இருந்தார் மேலும் அவருடைய பரலோகத் தகப்பனின் சித்தத்தை எப்போதும் செய்ய முயன்றார். அப்படியானால், கீழ்ப்படிதலை ஏன் அவர் கற்றுக்கொள்ள வேண்டும்?

"அப்பாவித்தனத்திற்கும் நல்லொழுக்கத்திற்கும் உள்ள வித்தியாசமானது, அப்பாவித்தனம் வாழ்க்கையில் சோதிக்கப்படாதது, ஆனால் நல்லொழுக்கம் என்பது அப்பாவித்தனம் சோதிக்கப்பட்டு வெற்றி கண்டது"[25] என்று டபிள்யூ. எச். க்ரிஃபித் தாமஸ் கூறினார். கிறிஸ்து எப்போதும் கீழ்ப்படிகின்ற மனநிலையைக் கொண்டிருந்தார், ஆனால் நல்லொழுக்கமாகிய கீழ்ப்படிதலைக் கொண்டிருக்க சோதனை அவசியம். "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" என்பது கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் (பிலி. 2:8).

சற்றே வித்தியாசமான பார்வை இது:

> தேவனுக்குக் கீழ்ப்படிவது என்னவாக இருக்கும் என்பதை இயேசு கற்றுக்கொண்டார், பூமியில் வாழ்ந்த அவரது மனித வாழ்க்கையில் இங்குள்ள சூழ்நிலைகளில் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். இயேசுவின் கீழ்ப்படிதலைக் குறித்து 26:53ல் மத்தேயுவின் ஒரு கருத்தில்

இருந்து உட்படுத்தப்பட்ட சிலவற்றைக் கற்றிருக்கலாம்.[26]

சிலுவையில் இருந்து அவரை விடுவிப்பதற்காக பன்னிரண்டு லேகியோன் தூதர்களை அவர் அழைத்திருக்கலாம், ஆனால் அது அவருடைய பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படியாமல் இருந்திருக்கும். பிதாவுக்குக் கீழ்ப்படிந்ததன் முடி சூட்டப்பட்ட மகிமை கெத்செமனேயில் காட்டப்பட்டது, அங்கு அவருடைய கீழ்ப்படிதல் பரிபூரணத்தில் காணப்பட்டது.

பட்டபாடுகளினாலே **அவர் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்**. கிறிஸ்துவின் பாடு சிலுவையின் வலி மற்றும் அவருடைய எதிரிகளால் சுமத்தப்பட்ட வேடிக்கையான குற்றம் மூலம் அதிகரித்தது. ஏசாயா 50:4, 5-ல் உள்ள மேசியாவின் தீர்க்கதரிசனத்தை எபிரெயர் புத்தகத்தை எழுதியவன் நினைவில் வைத்திருந்திருக்கலாம்:

> இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார். கர்த்தராகிய ஆண்டவர் என்செவியைத் திறந்தார்; நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை.

“குமாரன்” பாடுபட வேண்டியதாய் இருந்ததால், தேவனுடைய “குமாரர்கள்” அனைத்தையும் அனுபவிக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கலாம் (எபி. 12:5-11).[27]

**வசனம் 9.** கீழ்ப்படிதல் மூலம் **பூரணராக**, அல்லது “முழுமையாக” ஆசாரியத்துவத்திற்கான ஒவ்வொரு தேவையான தகுதியையும் இயேசு கொண்டிருந்தார். “பூரணம்” என்ற வார்த்தையின் பொருள், அவர் இந்த நேரத்தில் நன்னெறியின் பூரணத்தை அடைந்துவிட்டார் என்பதல்ல, ஆனால் பாடுகளைச் சகிப்பதற்கு அவரது மனத்தாழ்மையுள்ள விருப்பம் நமது இரட்சகராக இருப்பதற்கு அவரை “முழுமையான தகுதியுள்ளவராகச்” செய்தது.[28] எந்த மனித ஆசாரியனும் “பூரணனாக” இருந்தான் என்று ஒருபோதும் கூற முடியாது.[29] கிறிஸ்து முழுமையாக மனித இயல்பைக் கொண்டிருந்தார், ஆனால் மனிதகுலத்தின் நலனுக்காக அவர் தேவனின் சித்தத்திற்கு முழுமையாகத் தன்னை ஒப்புக்கொடுத்தார். எனவே, அவர் கீழ்ப்படிதலின் விளைவாக “முழுமையானவராக” இருந்தார், அவருடைய பாடுகளைத் தொடர்ந்து முடிசூட்டப்பட்டார். இப்பொழுது அவர் தேவனின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்கிறார். “இயேசு என்ற பொருளில் மட்டும் பாடு அனுபவிப்பது பிரதான ஆசாரியரின் தகுதிக்கு அடிப்படையானது மேலும் மனிதனுக்கு அவரது நன்மைகளின் அடிப்படை …” என்பது அவரது கற்றலாக இருந்தது[30] (ஒப்பிட்டுப் பார்க்க 2:17; 4:14).

எனினும், **தமக்குக் கீழ்ப்படிகிறவர்களை மாத்திரமே** அவர் இரட்சிக்கிறார். இங்கே உலகளாவிய இரட்சிப்புக்கு எந்த குறிப்பும் இல்லை; உண்மையில், இந்த வசனம் அத்தகைய எண்ணத்தை அழிக்கிறது. நாம் இரட்சிக்கப்படுவதற்கு சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் (1 பேதுரு 4:17; 2 தெச. 1:7-9). "கீழ்ப்படிதல் என்பது கிருபையைப் பெறுவதற்கு ஒரு முன்நிபந்தனை அல்ல, ஆனால் விசுவாச வாழ்க்கையில் உள்ளவர்களின் பண்பு" என்ற இது போன்ற பல வர்ணனையாளர்களின் அறிக்கைகள் விசித்திரமானது.[31] எபிரெயர் எழுத்தாளன் கூறியதுடன் இது நேரடியான முரண்பாடாக இல்லையா? நிச்சயமாக, விசுவாசிக்கிறவனுடைய வாழ்க்கையில் கீழ்ப்படிதல் தொடரும், ஆனால் இன்னும் கிறிஸ்து கீழ்ப்படிகிறவர்களை மட்டுமே இரட்சிக்கிறார் என்பது உண்மை! கிறிஸ்துவின் கீழ்ப்படிதலைப் போல, நமக்கு அவைகள் விருப்பமில்லாமல் அல்லது புரிந்துகொள்ளாமல் இருந்தாலும்கூட, தேவனின் ஒவ்வொரு கட்டளைக்கும் மனப்பூர்வமாக கீழ்ப்படிய வேண்டும்.

உலகின் இரட்சிப்பை சாத்தியமாக்கும் ஒரு தேவன் - மனிதக்கிறிஸ்து மட்டுமே. அவரே **நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணர்** αἴτιος [*ஐடியாஸ்*] மற்றவர்கள் பின்பற்றுவதற்கான ஒரு பாதையைத் தூண்டும் ஒரு "முன்னோடியாக" இந்த வார்த்தை குறிக்கலாம். இயேசு அதைச் செய்தார்.[32] இரட்சிப்பு வேறு ஒருவரிலும் காணப்படவில்லை (அப். 4:12).

இரட்சிப்பு கீழ்ப்படிதல் வழியாகப் பெறப்படுகிறது என்று கூறப்படுகிறது. அப்படியானால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் இருப்பவர்களுக்கு என்ன நடக்கும்? 1 பேதுரு 4:17-ல் அந்தச் சொல்லாட்சிக் கேள்வியை பேதுரு கேட்டான். கேள்விக்கான பதில் தெளிவானது, 2 தெசலோனிக்கேயர் 1:8ல் அதை பவுல் கொடுத்தான் - "சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு" "உரிய தண்டனை" வரும். இரட்சிப்பு என்பது அவருக்குக் கீழ்ப்படிவதைப் பற்றி வெறுமனே பேசுகிற, மற்றும் ஜெபிக்கிறவர்களுக்கு அல்ல (மத். 7:21-23). மனமுவந்து ஒப்புவித்தலும் கீழ்ப்படிதலும், சிலர் மிகப் பெருமையுடன் கூறிக்கொள்வது போல் உடனடியாக வருவதில்லை; மாறாக, அது காலப்போக்கில் ஆவிக்குரிய வளர்ச்சியுடன் வருகிறது (2 பேதுரு 1:5-11). இயேசுவின் வாழ்க்கை உறுதியான கீழ்ப்படிதலை உதாரணமாக்குகிறது. நெருக்கடியின் ஒரு நேரத்தில் திடீரென்று ஒரு கண்ணோட்டத்தில் மாற்றம் ஏற்படலாம், ஆனால் நாமும் உறுதியாகக் கீழ்ப்படிந்திருக்கிற போது மட்டுமே இயேசு சாதித்தது நமதாகும்.[33]

**வசனம் 10.** அவர் **பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்** என்பது 5:5-10ல் அவருடைய மகத்துவத்தின் சித்தரிப்பில் கிறிஸ்துவைப் பற்றிய நான்காவது சத்தியம். எழுத்தாளன் வசனம் 6ல் அறிமுகப்படுத்திய **மெல்கிசேதேக்கின்** ஆசாரியத்துவ

முறைமைக்குத் திரும்பினான். மீண்டும், 1:3, 13; 6:20; 7:3; 8:1; மற்றும் 10:12, 13-இலும் குறிப்பிடப்பட்டுள்ள சங்கீதம் 110-க்கு அவன் திரும்பினான். எபிரெயர்களுக்கு ஒரு மத்திய உரை இருந்தால், அது "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" என்று கூறுகிற சங்கீதம் 110:1-ஆக இருந்திருக்க வேண்டும்.

கிறிஸ்து "நியமிக்கப்பட்ட" (προσαγορεύω, *ப்ரசஹரூஒ*) நம்முடைய பிரதான ஆசாரியராக இருக்கிறார். "நியமிக்கப்பட்ட" என்பது இங்கு மட்டுமே புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட வார்த்தை ஆகும். இது தேவன் மூலம் மட்டுமே ஒரு "அறிவிப்பு" அல்லது "பிரகடனம்" ஆகும். ஆசாரியர்கள் தேவனால் நியமிக்கப்பட வேண்டியதாய் இருந்தது, அல்லது அவர்களின் சேவைக்கு மதிப்பு இல்லை.

நம்முடைய பிரதான ஆசாரியனாக இருப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தகுதி கிறிஸ்துவில் இருக்கிறது. அவர் நேரடியாக தேவனால் நியமனத்தைப் பெற்றார். குமாரனாக, பாவமான சாதாரண மனிதர்களுக்கும் ஆசாரியர்களுக்கும் மேலான தரத்தைக் கொண்டிருக்கிறார் (5:3). அவர் மனித சோதனைகளை அனுபவித்தார், இதனால் மனிதர்களைப் புரிந்து கொள்ளப் பொருத்தமானவராக இருந்தார் (வசனங்கள் 7, 8). தேவனுடைய நியமங்களுடன் கண்டிப்பான இணக்கம் தேவை என்பதை அவர் அறிந்திருந்தார் (வசனங்கள் 8, 9).

இயேசுவில் ஒரு "நித்திய" ஆசாரியர் (5:6) என்ற தேவனின் பார்வை ஆரோனின் ஒழுங்கு முடிவுற்றது என்பதைக் குறிப்பால் உணர்த்தியது. பழைய முறைமை கடந்து சென்றது என்பது ஒரு யூதன் - கிறிஸ்துவை ராஜாவாக ஏற்றுக்கொண்டவனுக்குக் கூட ஏற்றுக்கொள்வதற்கு மிகக் கடினமான சத்தியங்களில் ஒன்றாக இருந்தது. இது ஒருவனது பழைய வாழ்க்கையையும் தேவனுக்கு பரிசுத்தமாக அவன் எண்ணியிருந்த அடிப்படையையும் மறுக்க அவனுக்குத் தேவைப்பட்டது. அவன் காணாதவைகளுக்காக கண்டவைகளையும், பார்க்கக் கூடியவைகளை பார்க்க முடியாதவைகளுக்காகவும் விட்டுவிட வேண்டியதாய் இருந்தது.[34] வழக்கமான யூதன் கிறிஸ்தவ நம்பிக்கை முழுமையாக சாத்தானுடையதாக இருக்கும் என்று கருதினான். எபிரெயர் எழுத்தாளன், இயேசுவின் பிரதான ஆசாரியத்துவத்தைத் தனது முதல் வாசகர்களுக்கு விளக்க வேண்டிய நேரத்தையும் இடத்தையும் எடுத்துக் கொண்டான்.

## பரிபூரணத்தை அடைய எச்சரிக்கையும் அறிவுறுத்துதலும் (5:11-6:20)

நாம் எபிரெயரின் மற்றொரு அறிவுறுத்தலுக்கு வந்திருக்கிறோம்.

5:11-உடன் தொடங்கி ஆறாம் அதிகாரத்தின் மூலம் தொடர்ச்சியாக, அவன் கற்பித்துக் கொண்டிருந்ததைப் பற்றி மூன்றாவது விரிவான பயன்பாட்டை எழுத்தாளன் எழுதினான். முதல் மற்றும் இரண்டாவது அறிவுறுத்தல்கள் 2:1-4 மற்றும் 3:7-4:16 இல் காணப்படுகின்றன.

மனச் சோம்பல் காரணமாக, ஆசிரியன் விரித்துரைக்க விரும்பிய பேச்சுக்களின் ஆழ்ந்த சிந்தனைகளைக் கிறிஸ்தவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை, எனவே, அவைகளுடன் அவனது நிருபத்தின் ஆழமான விஷயங்களை அலசுவதற்கு முன்பு, ஆவிக்குரிய முதிர்ச்சியை வளர்த்துக் கொள்வதற்கான முக்கியத்துவத்தை அவன் அவர்களுக்கு நினைப்பூட்டினான். 5:11-14-ல் அவர்களின் முதிர்ச்சியின்மையின் அறிகுறிகளைச் சுட்டிக்காட்டி அவர்களுக்கு இந்த எதிர்மறையான நினைவூட்டலைக் கொடுத்தான்.

### புறக்கணிப்பின் தோல்வி (5:11-14)

**11இந்த மெல்கிசேதேக்கைப்பற்றி நாம் விஸ்தாரமாய்ப் பேசலாம்; நீங்கள் கேள்வியில் மந்தமுள்ளவர்களானபடியால், அதை விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும். 12காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். 13பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். 14பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரயங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.**

**வசனம் 11.** எபிரெயர் எழுதப்பட்டிருந்த கிறிஸ்தவர்கள் **கேள்வியில் மந்தமுள்ளவர்களாக** ஆகியிருந்தனர். பழைய இஸ்ரவேலர்களைப் போல (4:2), அவர்கள் கேள்விப்பட்டதிலிருந்து பயனடைந்திருக்கவில்லை. நாம் கேட்கிறவைகளில் கவனம் செலுத்தத் தவறியும் பயன்படுத்தாமலும் நமது ஆவிக்குரிய திறமைகளை இழக்கலாம். மத். 25-இல் உள்ள தாலந்து உவமை இந்த அபாயத்திற்கான சிறந்த உதாரணம்.

வளர்ச்சியடையவும் ஆவிக்குரிய மனச்சோர்வை தவிர்க்கவும் கிறிஸ்தவர்கள் தொடர்ந்து தேவனின் வெளிப்பாட்டைப் படிக்க வேண்டும். இந்தக் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய உயர் மட்டத்திற்கு பட்டம் பெற்றிருக்கவில்லை (வசனம் 11). அவர்கள் உண்மையில் பின்னோக்கிச் சென்றிருந்தார்கள்.

தீமோத்தேயு குறைந்தபட்சம் ஒரு “ஆவிக்குரிய வரத்தைப்”

பெற்றிருந்தாலும், அதை அனல்மூட்டி எழுப்பிவிடும்படியும் (2 தீமோ. 1:6), அசதியாய் இராதபடியும் (1 தீமோ. 4:14) அவன் கட்டளையிடப்பட்டான். விசேஷமாக வரமளிக்கப்பட்ட ஒருவனுக்கு தீமோத்தேயுவைப்போல விடாமுயற்சியான கற்றல் தேவைப்பட்டால் (2 தீமோ. 2:15), நமக்குக் குறைவாக எதிர்பார்க்க முடியுமா? சோகமான நிலையில் தள்ளப்பட்டிருந்த உரையாற்றப்பட்ட எபிரேயக் கிறிஸ்தவர்கள் போல, நமது சொந்த ஆவிக்குரிய மனச்சோர்வை நாம் குற்றம் சாட்டுகிறோம்.

மெல்கிசேதேக்குவின் ஆசாரிய முறைமை கும்ரான் சவக்கடல் சமூகத்திலிருந்து ஆவணங்களிலும் மற்றும் ஃபிலோ எழுத்துக்களிலும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்தக் கருத்து பொதுவாக விவாதிக்கப்படவில்லை. ஒருவேளை அவனது வாசகர்களுக்கு இந்த விஷயத்தில் பரிச்சயமில்லாத காரணத்தால், எழுத்தாளன் அவர்களிடம் தனது கருத்தை சிரமத்துடன் விளக்கி இருக்கிறான். நம் காலத்தில் கூட, மெல்கிசேதேக்கு பற்றிய அறிக்கைக்கு தடுமாறுதலான புரிதலை வாசகர்கள் கொண்டிருக்கிறார்கள் (7:1-10). இந்த கிறிஸ்தவர்கள் கவனமாகக் கேட்டிருந்தால், வேதாகமத்தில் ஆழ்ந்த கற்றலைக் கொண்டிருக்க முடிந்திருக்கும்.

**வசனம் 12.** போதிப்பிலுள்ள இயலாமையே அவர்களுடைய முதிர்ச்சியின்மையின் இரண்டாவது அறிகுறியாக இருக்கிறது: **காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது.** அறிவு குறைவாக இருப்பது அவர்களுடைய பிரச்சனையாக இருக்கவில்லை; மாறாக அவர்களுடைய திறமைகள் அவர்களுடைய நிலையை மேலும் கண்டிக்கத்தக்கதாகச் செய்துவிட்டது. இந்த நிலைமைக்கு வர அவர்கள் ஒருபோதும் நோக்கம் கொள்ளவில்லை, ஆனால் அவர்களுடைய மன சோம்பல் அவர்களை இந்த நிலைக்கு கொண்டு வந்துவிட்டது.[35] கிறிஸ்துவுக்குள் குழந்தையாக இருப்பதில் தவறேதும் இல்லை, ஏனெனில் கிறிஸ்தவ வாழ்வைத் தொடங்கும் ஒவ்வொருவரும் அந்த நிலையில் தான் தொடங்குகிறார்கள். பவுல் கொரிந்திய சபையினரை "குழந்தைகள்" (νήπιος, *நெபியோஸ்*; 1 கொரி. 3:1) என்றும், மிகவும் முற்பட்டவர்களை "பூரணமானவர்கள்" (τέλειος, *டெலியோஸ்*; 1 கொரி. 14:20) என்றும் வகைப்படுத்தினார். சகோதரர்கள் பூரணமானவர்களாக ("முதிர்ச்சியடைந்தவர்களாக," NIV) இருக்கவும், தேவனுடைய சித்தத்தைக் குறித்த அவர்களுடைய சிந்தனைகளில் முற்றிலும் உறுதியானவர்களாகவும் இருக்கவும் வலியுறுத்தினார் (கொலோ. 4:12).

இதன் ஆசிரியர் தாம் எழுதுகிற இந்த கிறிஸ்தவர்கள், கிரகித்துக் கொள்கிற திறனையும் மற்றும் சத்தியத்தை வெளிப்படுத்துகிற முற்பட்ட நிலையை பாராட்டுவதுமே அவர் அவர்கள் அடைய விரும்புகிற

முதிர்ச்சியாக இருந்தது. ஒரு குழந்தையானது நேசிக்கப்படக் கூடியதாக இருந்தாலும் காலங்கள் கடக்கையில் அந்த குழந்தை உதவியற்ற நிலையிலேயே இருந்தால், அதனுடைய நிலை பரிதாபகரமானதாக இருக்கும். பல வருடங்களாக கிறிஸ்தவர்களாக இருக்கும் ஆண்களும் பெண்களும் அவர்களுக்கு பெரும் அர்த்தம் தரக்கூடியதும், மேல் முறையீடு செய்யக்கூடியதும், வல்லமையுள்ளதுமாகிய ஆவிக்குரிய உண்மைகளைக் குறித்து விழிப்புணர்வில்லாமலிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாக இருக்கிறது.

சில காலம் அடிப்படை பிரசங்கங்களைக் கேட்ட பின்னர், எபிரெய கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களையும், இயேசு கிறிஸ்துவின் அடையாளங்களையும் கிரகித்துக் கொள்ள வேண்டியதாக இருந்தனர்; ஆனால் அவர்கள் போதுமான அளவிற்கு கிரகித்துக் கொள்ளவும் இல்லை, வசனங்களின் மூலக் கூறுகளில் மகிழ்ந்திருக்கவும் இல்லை. கேட்பதற்கு கடினமாக இருக்கிற ஒருவர் நாம் அவர்களுக்கு தெரிவிக்கக் கூடிய செய்தியை புரிந்துகொள்வதற்கு சிரமமாக உணரக்கூடும். இங்கு விவரிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட ஆவிக்குரிய சூழலில் தான் இருந்தனர்.

உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் அடுத்த தலைமுறையினரை இராஜ்ஜியத்தின் சத்தியங்களுக்குள் போதுமான அளவிற்கு எடுத்துச் செல்வதற்கு அறிந்திருக்க வேண்டும் (காண்க 2 தீமோ. 2:2). ஒருவேளை அவர்கள் முழுநேர போதகர்களாக ஒருபோதும் மாற இயலாமலிருக்கக் கூடும், ஆனால் அவர்கள் நடைமுறையில், தினசரி பிரங்கியாளர்களாக இருக்கக் கூடும். ஆதி சபையில் போதகத்திற்கென்றே சிறப்பாக நியமிக்கப்பட்ட போதகர்கள் இருந்தனர் (எபே. 4:11); மற்றவர்கள் பகுதி நேர போதகர்களாக தங்கள் போதனையை தொடர்ந்தனர் (அப். 5:32; 8:4). எல்லா கிறிஸ்தவர்களும் சிறந்த போதகர்களாக இருக்கக் கூடாமல் போனாலும் “தற்பாதுகாப்பு செய்யப்” போதுமானவராகவும், தன் நம்பிக்கையை குறித்து கணக்களிப்பவராகவும் இருக்க வேண்டும் (1 பேதுரு 3:15).

இந்த கடிந்துகொள்ளுதலில், முதன் முறையாக இதன் ஆசிரியர் தன் வாசகர்களை ஆவிக்குரிய முதிர்ச்சியின்மைக்காக கடிந்துகொள்கிறார். சபை ஆரம்பமானபோது, சில கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் தங்கள் கைகளை வைத்ததினால் ஆவிக்குரிய வரங்களை பெற்றிருந்தனர் (1 கொரி. 12:28; காண்க அப். 8:14-17; 19:1-6; ரோமர் 1:11; 1 கொரி. 12:4-7; 2 தீமோ. 1:6). இந்த கடிந்துகொள்ளுதலானது குறிப்பிட்ட கால இடைவெளியில் போதகர்களாக மாறாததிற்காக அல்லாமல், இந்த விசேஷித்த வரம் பெற்ற போதகர்களோடு அழிந்து போய்விடக் கூடாது என்பதற்காக கொடுக்கப்பட்டது. அவர்களுக்கு பதிலாக மற்றவர்கள் தங்கள் இயற்கையான திறமைகளை வளர்த்து முதிர்ச்சியடைந்த போதகர்களாக மாற வேண்டியது அவசியமாக

இருந்தது. சபைக்கு முழு வசன வெளிப்பாடுகள் கிடைக்கும் வரைக்கும் இந்த விசேஷ வரம் பெற்ற போதகர்கள் சபையை வழி நடத்துவதில்; உதவிசெய்தனர் என்று எபேசியர் 4:8-15 காட்டுகிறது. இந்த அற்புத வரங்கள்; புதிதாக பிறந்த சபையை அதனுடைய செயலாக்கமுள்ள சேவையில் கட்டியெழுப்புவற்காக கொடுக்கப்பட்டது, ஆனால் கிறிஸ்தவர்களின் அடுத்த தலைமுறையினர் ஆவிக்குரிய வளர்ச்சியின் மூலம் தங்கள் இயற்கையான திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

2 தீமோத்தேயு 2:2ல் பவுல் தன்னுடைய மனதில் கொண்டிருந்ததே அவர் போதிக்க வேண்டிய கடமையாக இருந்தது: “அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.” சபையின் எதிர்காலமானது சத்தியத்தை அடுத்த தலைமுறையினருக்கு சரியான முறையில் மாற்றுதலில் சார்ந்திருக்கிறதாக அவர் சுட்டினார்.

தனிப்பட்ட வளர்ச்சி முயற்சியினால் வருகிற ஒன்றாக இருக்கிறது. வளர்ச்சியடைவதில் தோல்வி, அல்லது விசுவாசத்தின் அடிப்படைகளை மறந்து போகும் நிலைக்கு வருதலானது, நாம் பயிற்சிக்க வேண்டுமென்று கிறிஸ்து விரும்பினவற்றிற்கு எதிரானதாக இருக்கிறது. இந்த கூர்மையான கடிந்து கொள்ளுதலை எபிரெய கிறிஸ்துவர்கள் தங்கள் கூடுகையில் வாசிக்கையில் அவர்கள் விழிப்புணர்வு அடைந்திருக்க வேண்டும்.

யாரோ சிலர் “நான் ஒரு போதகராக வளர்ச்சியடையவில்லை ஏனெனில் நான் பொறுப்புகளை விரும்பவில்லை” என்று ஏறக்குறைய சொல்வதை நாம் கேட்க முடிகிறது. ஒரு போதகராக மாறுவதில் பெரும் பொறுப்பிலிருப்பதாக யாக்கோபு கூறினார். மற்றவர்களுக்கு போதிக்க நாடுகிறவர்கள்; கடும் தண்டனை அடைவதாக கூறினார் (யாக். 3:1). தேவன் நம்முடைய போதனையையும் நம் மூலம் சுவிசேஷத்தை கேட்கிறவர்களையும் ஆசீர்வதிக்கிறார். ஆனால் மற்றவர்களுக்கு போதிப்பதிலும் மற்றவர்களை மனமாற்றமடையச் செய்வதை விடவும் சில காரியங்கள் கிறிஸ்தவர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்க செய்யக் கூடும். யோவான் இதனை இப்படியாக கூறுகிறார்: “என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை” (3 யோவான் 4).

**தேவன் உரைக்கிற ஆரம்ப கட்ட கோட்பாடுகளின் கருத்தானது** பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டின் சத்தியங்களுக்கு நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் பிரமாணங்கள் அப்போஸ்தலர் 7:38ல் “ஜீவ வாக்கியங்கள்” என்று கூறப்பட்டுள்ளது. ரோமர் 3:2 “தேவனுடைய வாக்கியங்கள்” என்று சித்தரிக்கிறது. புதிய ஏற்பாட்டு உபதேசங்களும் “தேவனுடைய

வாக்கியங்கள்" என்று அழைக்கப்பட்டுள்ளது (1 பேதுரு 4:11). நியாயப்பிரமாணமானது இஸ்ரவேலர்களை கிறிஸ்துவிற்கு நேராக ஆயத்தம் செய்தது. இது "கிறிஸ்துவிற்கு நேராக நடத்துகிற உபாத்தியாக" கூறப்பட்டுள்ளது (கலா. 3:24). இது குறிப்பாக யூதருக்கு அப்படி செயல்பட்டாலும், புறஜாதியாருக்கும் உபாத்தியாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் உபதேசங்களின் மூலம் நாம் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்கிறோம், மேலும் புதிய ஏற்பாட்டிலிருந்து சத்தியங்கள் இன்றைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியவைகளைக் குறித்து கற்றுக் கொள்வது அவசியமாக இருக்கிறது.

எபிரெயர் 6:1ல் "கிறிஸ்துவின் மூல உபதேசங்களைக்" குறித்த குறிப்புகளை நாம் பார்க்கிறோம். அநேகமாக "தேவனுடைய வாக்கியங்களுக்கும்" கிறிஸ்துவின் உபதேசங்களுக்கும் வேறுபாடு இருக்கக் கூடும், ஆனால் இந்த உருப்படிகள் ஒரு யுகத்திலிருந்து மற்றொரு யுகத்தை ஒன்றுடன் ஒன்றைச் சுட்ட குறிப்பிடப்பட்டுள்ளது. "உபதேசங்கள்" (στοιχεῖον, *ஸ்டொய்கெய்யொன்*) என்பது "உயிரெழுத்தின் எழுத்துக்கள்" அல்லது காண்கிற உலகத்தை உண்டுபண்ணுகிற அடிப்படை "மூலக்கூறுகள்" ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது (2 பேதுரு 3:10, 12).[36] இங்கு கூறப்பட்டுள்ள சிந்தனை என்னவெனில் "நீங்கள் கிறிஸ்தவத்தின் அஆஇ களை மீண்டும் கற்க வேண்டியதாக இருக்கிறது." வேறொரு உணர்வில் நாம் அஆஇ களுக்கு பின்னால் ஒருபோதும் சென்று விடவில்லை, ஆனால் நாம் பயன்படுத்துகிற வார்த்தைகள் நம்முடைய உண்மையான இயல்பினுடைய எழுத்துக்களின் ஒரு பகுதியாக இருக்கிறபடியால் நாம் அவற்றை மீண்டும் மீண்டும் செய்யத் தொடருவதில்லை. மற்றொரு சூழலில், முதன்மை கோட்பாடுகளை கற்க தோல்வியுறுவதானது, ஒரு முன்னேறின கணித மாணவர் வாய்ப்பாட்டை ஒரு நாளும் கற்றறியாததைப் போன்றதாக இருக்கிறது. ஒவ்வொரு கணித பிரச்சனைகளையும் தீர்க்க அவர் அவற்றை மறுபடியும் நோக்க வேண்டியதாக இருக்கிறது.

**பால்** இருக்கிறது மற்றும் ஒரு "இறைச்சி" (KJV) அல்லது தேவனுடைய வசனத்தில் **திட உணவும்** இருக்கிறது. "பாலை" மட்டும் பெறும் வண்ணம் அமையப் பெற்று நிலைத்திருப்பது பெரும் வெட்கத்திற்குரியதாக இருக்கிறது. இது முதலாம் நூற்றாண்டில் இருந்த மற்றும் பவுலால் பயன்படுத்தப்பட்ட பொதுவான உருவகமாக இருந்தது (1 கொரி. 3:1, 2).

**வசனம் 13. நீதியின் வசனங்களில் பழக்கமில்லாதவர்கள்**, அல்லது "நீதியின் வசனத்தை அறியாதவர்களே" (NKJV) "பாலுண்கிற கிறிஸ்தவர்களாக" இருக்கிறார்கள். கொரிந்தியரின் அன்பில் காணப்பட்ட குறைபாடே அவர்களுடைய வளர்ச்சிக்கு தடையாக இருந்தது. அறிவின் குறைபாடு எப்போதுமே முன்னேற்றத்திற்கு

தடையாக இருப்பதில்லை, ஏனெனில் கொரிந்து சபையினர் அறிவை பெறுவதற்கான ஆவிக்குரிய வரங்கள் அனைத்தையும் பெற்றிருந்தனர் (1 கொரி. 1:6, 7). வெறும் படிப்பதற்கும் மேலாக தேவனுடைய வசனத்தின் மீதான தியான குறைபாடானது அவர்களை நிரந்தரமாக குழந்தைத்தனத்திற்கு நேராக வழிநடத்தியது. சபையினருக்கு வெறும் பாலுணவே அவசியமென்று சில போதகர்கள் நினைத்து அவர்கள் மூல உபதேசத்திற்கு அப்பாற்பட்டு வேறு உபதேசங்களுக்கு செல்வது கிடையாது. இது அநேகமாக அவர்களுடைய போதுமான அறிவு குறைபாடாகவும் இருக்கலாம். மற்றவர்கள் ஏறக்குறைய அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆழ்ந்த பிரசங்கங்களை செய்கின்றனர். நமக்கு மூல உபதேசங்களும் மற்ற மேம்பட்ட உபதேசங்களும் அவசியமாக இருக்கிறது. ஒரு பிரசங்கியார் "இறைச்சியை" கொடுக்காமல் உறுப்பினர் "முழு வளர்ச்சியை" எப்படி அடையக்கூடும்?

**வசனம் 14.** முதிர்ச்சியடைந்தவர்கள் அல்லது வயதின் **முதிர்ச்சியை** அடைந்தவர்கள் என்பதே இந்த வசனத்தில் காணப்படும் குறிப்பாக இருக்கிறது. இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் ஒருவேளை வயது சென்றவர்களாக இருக்க வாய்ப்பில்லை. இங்கே வசனம் 13ல் காணப்படுகின்ற குழந்தைக்கும் நபருக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. இறுதியான இரட்சிப்பை அடைவதற்கு "குழந்தையானது" கண்டிப்பாக "தேவனுடைய வார்த்தையாகிய பாலை" விரும்ப வேண்டியதாக இருக்கிறது (1 பேதுரு 2:2). வசனங்களின் ஆழத்தில் தொடர்ந்து சென்று, கற்றுக் கொண்டதை பயன்படுத்தினால் **நன்மை மற்றும் தீமை** ஆகியவற்றை ஒருவர் **பகுத்தறிவார்**. ஒவ்வொரு பரிசுத்தவான்களின் நோக்கமும் இதுவாகவே இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக எபிரெயர் நிருபம் ஒரு சவாலாக இருக்கிறது, ஏனெனில் இது **திடமான உணவை** கொண்டுள்ளது. இதனை ஜாக்கிரதையாக படிப்பதும், இதனை புரிந்துகொள்ள தீர்மானிப்பதுமே நம்முடைய ஆவிக்குரிய அளவுகளை மேம்படுத்திக் கொள்ளும் ஒரு வழியாக இருக்கிறது.

## நடைமுறை

### ஒரு செயலாக்கம் நிறைந்த பிரதான ஆசாரியன் (5:1, 2)

ஒரு பிரதான ஆசாரியனானவர் தேவனால் நியமிக்கப்பட்ட மனிதர்களிலுள்ள ஒரு மனிதனாக இருக்கிறார். அவர் அறியாதவர்களையும், வழி தவறினவர்களையும் மென்மையாக நடத்தி, பாவங்களுக்காக பலிகளை செலுத்த வேண்டியதாக இருந்தது.

ஆரோன் இந்த தகுதிகளை செம்மையாக நிறைவேற்றினார். அவரும் மோசேயும் இஸ்ரவேலர்கள் கானானிற்குள் பிரவேசிக்க

மறுக்கையில் மிகுந்த துக்கத்தோடு முகங்குப்புற விழுந்தார்கள். தேவனுக்கும் அவரால் ஏற்படுத்தப்பட்ட தலைமைக்கும் எதிராக முரட்டாட்டம் செய்து வழிதவறிப் போனவர்களிடம் அவர்கள் மன்றாடி கேட்டுக்கொண்டனர் (எண். 14:5).

பிரதான ஆசாரியரின் பணியானது மக்களுக்கு ஊழியம் செய்வதும், அவர்கள் துக்கம், சோகம், மற்றும் குற்ற உணர்வு ஆகியவற்றை விட்டு வெளியில் வர உதவி செய்வதுமாக இருந்தது. ஒவ்வொரு பலியின் நோக்கத்தையும் அவர் மக்களுக்கு விவரித்து, அவர்களுடைய பாவத்துடன் தொடர்பு கொள்ள உதவி செய்து, மன்னிப்பை ஏற்றுக்கொள்ளச் செய்தார். மோசேயுடன் இணைந்து ஆரோன் இஸ்ரவேலரை காக்கும்படிக்கு தேவனிடம் இரைஞ்சினார் (எண். 14:11-19). தேவன் அந்த ஜெபத்திற்கு பதிலளித்தார், ஆனால் அவர் குற்றம் செய்தவர்கள்; அவர்களுடைய பாவத்திற்கான தற்காலிக மரண தண்டனையிலிருந்து தப்பித்து விடாமல் செய்தார் (14:20-24).

**தேவனைக் குறித்த நம்முடைய அறிவு (5:1, 2)**

நம்முடைய பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாட்டின் வழியாக பிதாவாகிய தேவனைக் குறித்த நம்முடைய அறிவானது வருகிறது. இதைக் குறித்து வேறு எங்கும் காணப்படாமல் எபிரெயரில் அதிகமாக காணப்படுகிறது. நாம் தேவனை அறிந்திருக்கிறோம் ஏனெனில் நாம் அவரை காண்கிறோம், அவரும் அவருடைய பண்புகள் அனைத்தும் கிறிஸ்துவிற்குள் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (யோவான் 14:5-11; கொலோ. 2:9). நாம் கிறிஸ்துவை தேவனுடைய வார்த்தையின் மூலம் விசுவாசத்தினால் அறிகிறோமேயல்லாமல், அவரோடு கொண்டுள்ள ஏதோ சில "தனிப்பட்ட நெருங்கிய அனுபவத்தினாலல்ல."

கிறிஸ்தவர்கள் பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரோடு நேரடியான "அனுபவத்தைக்" கொண்டிருக்கவில்லை. கர்த்தர் முதலாம் நூற்றாண்டு ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்களிடம் பேசினது போல தற்போது நம்மோடு கூட நேரடியாக பேசுவது கிடையாது. எனினும் இன்றைக்கு பலர் தேவனோடு "தனிப்பட்ட நெருங்கிய அனுபவத்திற்காக" ஏங்குகிறார்கள், ஆனால் அவர்களுடைய விருப்பமானது உணர்வுகளின் அடிப்படையில் இருக்கிறதேயல்லாமல் வசனத்தின் அடிப்படையிலல்ல. எந்த ஒரு தெய்வீக வெளிப்பாடோ அல்லது அற்புதமோ ஒருபோதும் தனியாக நின்றது கிடையாது, அல்லது ஒரு நபர் "தெய்வீக" அனுபவத்தை கொண்டிருப்பதாகக் கூறுவதின் அடிப்படையில் விசுவாசிக்க வேண்டுமென்று தேவன் எதிர்ப்பார்ப்பது கிடையாது. பவுல் தான் "ஒரு மெய் அப்போஸ்தலர் என்ற அடையாளத்தை" உரிமைகோரினது போல (2 கொரி. 12:12) மக்கள் கோர முடியாது!

## அறியாதவர்களிடமும் தவறாக வழிநடத்தப்பட்டவர்களிடமும் மென்மையாக நடந்து கொள்ளுதல் (5:2)

ஸ்தோயிக்கர் நடுவில், பாவிகள் மீது மென்மையைக் காட்டுவது தகுதியில்லாததாகும். அவர்கள் பாவிகள் மீது மனதுருக்கமும், இரக்கமும் இல்லாமலிருப்பது அவசியமென்று நினைத்தார்கள். உணர்ச்சிவசப்பட்டவர்கள் மீதான அவர்களுடைய பண்பானது "ஒழுங்காக அமையப்பெற்றிருக்கிற இந்த சமுதாயத்தில் அவர்கள் தொந்தரவாக இருக்கிறார்கள்"[37] என்பதாக இருந்தது. எப்படியாயினும் சபையானது கிறிஸ்துவானவர் இருந்தது போன்றே பெலவீனர் மீதும் நலிந்தவர்கள் மீதும் எப்போதும் கரிசனையோடு இருக்க வேண்டியதாக இருக்கிறது (12:12, 13). மனிதர்களிலிருந்து வேறுபட்டு நிற்பவராகிய ஒரு பிரதான ஆசாரியன் தொடர்ச்சியாக உதவி தேவைப் படுகிறவர்களுக்கு இளகிய மனதுருக்கமாக இருக்க வேண்டும்.

உண்மையில் அவர்கள் பிடிவாதமான பாவிகளாக இருந்தனர்; ஆனால் தவறாக வழிநடத்தப்பட்ட மற்ற பல ஆத்துமாக்கள் "மேய்ப்பனற்ற ஆடுகளைப் போல" இருந்தார்கள் (மத். 9:36). நாம் நம்மை நோக்கிப் பார்த்து சோதனைக்குட்படாதபடிக்கு அவர்கள் மீது மனதுருக்கமாக இருப்பது அவசியம் (கலா. 6:1, 2; NKJV). ஒருவேளை அவர்கள் தேவனிடம் திரும்பி வர மனதாக இருக்கக் கூடும், ஆனாலும் தங்களுக்குத் தாங்களே இன்னமும் வழியை கண்டுபிடிக்கக் கூடாமலிருக்கக் கூடும். நலிவான பரிசுத்தவான்கள் மேல் மேய்ப்பராக இருக்கும் கடமையானது மூப்பர்களின் விசேஷமான கடமையாக இருக்கிறது (13:17), தவறு செய்கிற சகோதரனுக்கு உதவி செய்கிற இலட்சியமானது ஒவ்வொரு கிறிஸ்தவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மூப்பர்கள் பணியும் மற்றும் சுவிசேஷகர்களின் பணியும் பழைய ஏற்பாட்டின் உண்மையான ஆசாரியனோடு சில காரியங்கள் ஒத்திருக்கிறது. தேவனுடைய சபையின் தலைவர்கள் அவர்களுடைய பொறுப்பில் கொடுக்கப்பட்டுள்ள மக்களுடைய ஆவிக்குரிய தேவைகளை சந்திப்பது அவசியமாகிறது. ஊழியக்கார தலைவர்களின் பணியானது அவர்களுக்கு குதூகலம் ஏற்படுவதற்காகச் செய்வதற்கு அப்பாலிருக்கிறது. பிரசங்கியாரின் வார்த்தைகள் வெறும் "நல்லாலோசனை … ஒளிர்கிற மற்றும் மகிழ்ச்சியாக இருப்பதற்கான சிறு குறிப்புகள் அல்லது தாக்கம் நிறைந்து அல்லது வெற்றிகரமாக காணப்படுவது எப்படி என்பதாக மட்டும் இருக்கக் கூடாது. அவர் தேவனுடைய சார்பில் அவர்களிடம் பேச வேண்டியவராக இருக்கிறார்."[38] மக்களை அவர்களுடைய பெயரைச்சொல்லி ஜெபிப்பது மூப்பர்கள் மற்றும் பிரசங்கியார்களின் தினசரி கடமையாக இருக்க வேண்டும்.

ஒரு உறுப்பினரிடம் பிரச்சனையோ அல்லது பெலவீனமோ உறுதியாக்கப்பட்ட உடனேயே சபையின் அந்த உறுப்பினரிடம் செல்வது சபையின் தலைவர்கள் சந்திக்க பெரும் தேவையாக இருக்கிறது. அறியாத மற்றும் வழி தவறிப்போனவர்களிடம் திறம்பட தொடர்பு கொள்வதற்கு ஒருவர் பாதை மாறிச் சென்ற சகோதரனைத் தேடிச் சென்று, அவருடைய பாவத்தை அவருக்கு சான்றுப்படுத்தி அதிலிருந்து வெற்றி பெற அவரோடு இணைந்து தாழ்மையாக ஜெபிக்க வேண்டும். மென்மையாக இருப்பது எளிது ஆனால் பாவத்தோடு மிகச் சரியாக தொடர்பு கொள்வது மிகவும் கடினமானது!

பிரதான ஆசாரியன் தன் சொந்த பெலவீனங்களைக் கொண்டிருப்பது போல, நாமும் கொண்டிருக்கிறோம். ஆக தவறு செய்கிறவர்களை அந்த எண்ணத்தில் அணுக வேண்டும். கலாத்தியர் 6:1, 2 ஆனது நிறைவேற்ற வேண்டிய ஒரு அவசர கட்டளையைக் கொண்டுள்ளது: "நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு." இளைஞரிடம் ஒரு பாவியை மனதுருக்கத்தோடு நேரடியாக கடிந்துகொள்ளும் தைரியம் அபூர்வமாக இருக்கிறது. ஆனால் மூப்பர்களும், வயது சென்ற ஊழியர்களும் இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். பாவிகள் தங்களுக்குள் வியாதி கொண்டிருந்து, வழிகாட்டுதலுக்கு ஏங்குகிறார்கள். ஒருவேளை அவர் பெலவீனமான முன்மாதிரியை பின்பற்றியிருக்கக் கூடும். ஒவ்வொரு மூப்பரும் மற்றும் ஒவ்வொரு முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவரும், நீதியின் வழியை தைரியமான வார்த்தைகளால் சுட்டிக்காட்ட வேண்டும். நாம் ஒருக்காலமும் கடினமானவர்களாக இருக்க வேண்டாம்; கலாத்தியர் 6:1, 2ல் கூறப்பட்டுள்ள *அனைத்தும்* கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும். எச்சரிக்கையானது மிகுந்த ஜாக்கிரதையாக கொடுக்கப்பட வேண்டும்.

**தேவனுடைய கனம் (5:4, 5)**

ஒரு மூப்பரின் தகுதிகள் 1 தீமோத்தேயு 3:1-ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது: "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை." விருப்பமே ஒரு தகுதியாக இருக்க முடியாது; "நிச்சயம்" என்பது விருப்பத்திற்கு பின்னர் குறிப்பிடப்பட்டு, அடுத்து வருகிற வசனத்தை பின்பற்றி வரும் நிபந்தனையை செயல்முறைப்படுத்துகிறது. இந்த அலுவலை வெளிப்படையாக விரும்புகிற ஒருவர், பொதுவாகவே கௌரவத்தை விரும்புகிறாரேயல்லாமல் ஊழியம் செய்ய விரும்பவில்லை. ஒரு கண்காணியாக அல்லது மூப்பராக இருப்பது நிச்சயமாகவே "ஒரு நல்ல வேலையாக" இருக்கிறது மேலும் ஒருவர் இந்த அலுவலுக்கு பாத்திரமான தகுதிகளை விரும்ப வேண்டும். எப்படியாயினும் சபையில் ஒரு "பதவிக்காக" ஓடுவது என்பது மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் பொறுப்பை தவறாக எடுத்துக் கொள்ளப்பட்ட

கருத்தை காட்டும். ஒரு மனிதர் தகுதி வாய்ந்தவர் என்று நம்பினால் அவரை மற்றவர்கள் தெரிவு செய்யட்டும்; அவருடைய நோக்கமானது மகிழ்ச்சியாக ஊழியம் செய்வதாக இருக்கிறது.

ஒரு மூப்பர் அல்லது உதவிக்காரரின் பங்கானது குறைவான பொது மதிப்போடு இணைந்து வருகிறது. இந்த அலுவல்களை ஏற்கிறவர்கள் அவர்கள் மீது ஆத்துமாக்களின் பிரதான மேய்ப்பரால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அந்த சுமத்தப்பட்ட அந்த மதிப்பிற்கு காத்திருக்க விரும்ப வேண்டும் (1 பேதுரு 5:1-4). கிறிஸ்து சுய பெருமையை நாடவில்லை; மாறாக அவருடைய குமாரத்துவத்தை அறிவிக்கவும் அவரை நியமிக்கவும் பிதாவை அனுமதித்தார் (எபி. 5:5, 6). அவர் தம்மைத் தாமே "மகிமைப்படுத்திக் கொள்ளவில்லை" (காண்க யோவான் 8:54; 17:1, 5; அப். 3:13).

சபையின் ஒப்புதலில்லாமல் எவரும் மூப்பரைப் போல செயல்பட எண்ணிக்கொள்ளக் கூடாது. சபையின் மக்களே தங்கள் சொந்த மூப்பரை தெரிவு செய்து கொள்ள வேண்டும் (அப். 6:3). தகுதியற்ற நண்பர்களையோ, உறவினர்களையோ அல்லது குடும்பத்தினரையோ அதனுடைய எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்கிற ஒரு தலைமைத்துவமானது அத்தகைய செயலுக்காக நிச்சயம் அதற்குரிய விலையை கொடுத்தாக வேண்டும். ஒருவேளை இது மக்களிடம் கோபத்தை தூண்டியெழுப்பும் அல்லது அவர்களை சபையைவிட்டு வெளியில் செல்லவும் செய்துவிடும்.

புதிய ஏற்பாட்டு மூப்பர்களுக்கான தகுதிகள் பழைய ஏற்பாட்டு ஆசாரியர்களுக்கான சட்டதிட்டங்கள் போன்றது அல்ல, ஆனால் கீழ்ப்படிவதற்கான சட்டதிட்டங்கள் ஒன்றாகவே உள்ளது. கிறிஸ்தவ தலைவரானவர் தேவனிடமிருந்து வழிகாட்டுதல்களை வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறப்பட்டிருந்தாலும் அவைகளை கவனிக்க வேண்டியவராக இருக்கிறார்.

### கெத்சமெனேயில் இயேசுவின் ஜெபத்திற்கு தேவன் எவ்வாறு பதிலளித்தார் (5:7)

"ஆம்" "இல்லை" அல்லது "சிறிது நேரம் காத்திரு" போன்ற மூன்று வழிகளில் தேவன் பதிலளிப்பதாக நாம் அடிக்கடி கூறுவதுண்டு. ஏனெனில் அதைப் போன்ற வாக்கியங்கள் வேதத்தில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறபடியால், நாம் அவற்றை ஏற்றுக்கொள்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

செயல்தாக்கமுள்ள ஜெபத்திற்கு தேவனால் கூடும், அவர் பதிலளிப்பார் போன்ற (யாக். 1:5-7) நிபந்தனைகளுள்ளது. நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும் ("அவருடைய

அதிகாரத்தினால்” என்பதே இதன் பொருள்; யோவான் 14:13ஐ காணவும்), இது தேவனுடைய சித்தத்திற்கு இசைந்திருப்பதை சுட்டுகிறது (1 யோவான் 5:14). தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் “ஆம்” என்று இருப்பதாக பவுல் கூறுகிறார் (2 கொரி. 1:18-20). நம்முடைய ஜெபங்கள் கண்டிப்பாக தேவனுடைய சித்தத்திற்கு இசைந்திருக்க வேண்டும்; அவருடைய தாழ்மையுள்ள மற்றும் கீழ்ப்படிந்துள்ள பிள்ளைகளாக நாம் இப்படி ஜெபிப்போமென்றால் இதுபோன்ற இயற்கையான பலன்கள் கிடைக்கும். இயேசு சிலுவையிலிருந்து விடுதலையை மட்டும் கேட்கவில்லை; இதில் முக்கியமானது என்னவென்றால் அவர் தேவனுடைய சித்தம் நிறைவேற ஜெபித்தார் (மத். 26:42). எனவே அவருடைய ஜெபம் “ஆம்” என்று பதிலளிக்கப்பட்டது.

பவுல் தன்னுடைய சரீரத்தில் சாத்தானிடமிருந்து அடிபட்டு, பெலவீனத்தை கொண்டிருந்த போது, பதில் கிடைப்பதற்கு முன்னர் மூன்று முறை அவர் ஜெபித்தார். “பவுலே வெறும் சுகமாகுதலை விட சிறப்பானதொன்றை நான் உனக்காக வைத்திருக்கிறேன்” என்பதே அதற்கு பதிலாக இருந்தது. ஒருவேளை நீ பாதிப்பிற்குள்ளாகி இருந்தால், உன் மூலமாக என்னுடைய செய்தியின் வல்லமை மேலும் பிரகாசிக்கக் கூடும். இந்த மறுமொழியினால் மகிழ்ச்சியடைந்ததாக பவுல் அறிக்கையிட்டார் தேவன் அவருக்கு எதை விரும்பினாரோ அதை அவர் பின்பற்ற விரும்பினபடியால் அவருடைய ஜெபம் “ஆம்” என்றும் பதிலளிக்கப்பட்டது (2 கொரி. 12:7-10).

அதைப் போன்ற ஆவியோடு நாம் ஜெபித்தால் நம்முடைய ஜெபம் பதிலளிக்கப்படும். இதைத் தான் வேத வசனமும் போதிக்கிறது. சரியாக சொல்லப்பட்ட ஜெபத்திற்கு எப்போதும் தேவன் பதிலளிக்கிறார். விசுவாசத்தோடு ஏறெடுக்கப்படும் ஜெபத்தில் இது நமக்கு நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும். நம்முடைய மிகவும் தேவையான சமயத்தில் எதை, எப்படி உதவியாக திருப்பிக் கொள்வது என்பதைக் குறித்து இயேசு ஒரு வல்லமையுள்ள எடுத்துக்காட்டை அளித்திருக்கிறார்.

### இயேசு கற்றுக் கொண்டது போல நாமும் கற்று கொள்ள வேண்டும் (5:8, 9)

தேவனுடைய சட்டங்கள் தர்க்க சாஸ்திரத்தின் அடிப்படையில் காணாமல் போனாலும் ஒருவர் கீழ்ப்படிவதினால், விசுவாசத்தினால் அவர் கீழ்ப்படிதலை கற்றுக் கொள்கிறார். தேவன் நம்மில் எதிர்பார்க்கும் தேவைகள் ஒருவேளை எப்போதும் அறிவிற்குட்பட்டதாக இருக்காது. நாம் நம்முடைய மிகவும் நேசிக்கப்பட்ட சிலைகளை அழித்து சிறு பிள்ளையைப் போல அர்ப்பணித்தால் அதன் பின்னரே நாம்

கீழ்ப்படிந்திருக்கிறோம். அதன் பின்னரே நாம் உண்மையில் கீழ்ப்படிதலை கற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த புரிதலானது ஒருவேளை பாடுகளின் மூலம் வரக் கூடும். கீழ்ப்படிதலானது கேள்வியெழுப்பாமல் செய்யப்படும் வரை அது ஒருபோதும் பூரணப்படாது. நாம் நம்முடைய சொந்த நன்மையை பாராமல் நம்மை தேவனுடைய இரக்கங்களின் மேல் முழுமையாக வைத்துவிடவேண்டும். நாம் முற்றிலும கீழ்ப்படிந்தால், அதன் பின்னர் நாம் பூரணமாக, முற்றிலுமாக முதிர்ச்சியடைந்த பரிசுத்தவான்களாக்கப்படுவோம்.

பாடுகளானது அவைகள் நம்முடைய நலனுக்கான தேவனுடைய மேலதிகாரமுள்ள ஒதுக்கீடுகள் என்று ஏற்றுக்கொள்ளப்படும்போது மிகவும் நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும். மனிதருக்கு அநீதியாக தோன்றும் பாடுகளே பாவிகள் தேவனுக்கெதிராக வைக்கும் பெரும் வாதமாக இருக்கிறது. "தேவன் என்னை உண்மையாகவே நேசித்தால் அவர் இவைகளை எல்லாம் எப்படி அனுமதிக்கக் கூடும்?" என்று மக்கள் கேட்கக் கூடும், இயேசு இதைக் குறித்து ஒரு உறுதியான பதிலை கொடுக்கவில்லையென்றாலும், அவருடைய சிலுவை மீதான பாடுகள் ஒரு மனித இனம் திட்டமிடுதலை விட சிறந்த பதிலை தரக்கூடும். ஆகாயத்து பட்சிகளைப் பார்க்கிலும் நிலத்தின் மலர்களைப் பார்க்கிலும் பரம பிதா அக்கறை கொள்வதாக அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தார் (மத். 6:26-34), ஆனால் இந்த சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுதலானது நாம் நம்முடைய சார்பில் மரித்த இரட்கருடைய மரணத்தை ஏற்றுக்கொண்டு சிலுவையின் முன் மண்டியிட்டால் மட்டுமே வரும். இது காணக்கூடிய வெளிப்படையான காரணமில்லாமல் வரும் உச்சக்கட்ட பாடுகளாகும்; ஆனால் அது பெரும் நோக்கத்தை கொண்டிருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம், ஏனெனில் அது பயனுள்ள தெய்வீக வெளிப்பாடாக இருக்கும் (ரோமர் 3:23-26; 5:8, 9).

தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்?" என்று கூப்பிட்டார். நாம் அந்த நிறைவேறின தீர்க்கதரிசனத்தினுடைய ஆழத்தை துல்லியமாக கண்டுபிடிக்க முடியாது (சங். 22:1), ஆனால் இயேசு தேவன் அருகில் இல்லாமல் அவரை மட்டுமே நம்பக் கூடிய அளவிற்கு பாடுகளை சகித்தார் என்று நாம் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளக்கூடும். அவர் அந்த எல்லை வரை தம்முடைய பிதாவின் சித்தத்தை நம்பினார். தேவனுடைய பிள்ளையாக நம் மீதான அவருடைய அன்பானது நாம் பாடுகளிலிருந்து விலக்கப்பட்டிருப்போம் என்று பொருள்படுத்துவது இல்லை; உண்மையில்; அது எதிர்த்தரப்பை பொருள்படுத்துகிறது. இது நம்முடைய மனதிற்கு காரணமில்லாததாக தோன்றும், ஏனெனில் தேவனுடைய மெய்யான ஞானம் பயித்தியமாக தோன்றும். கிறிஸ்துவின் கிரீடத்திற்கு முன்னர் சிலுவை வந்தது போலவே நமக்கும்

கண்டிப்பாக அப்படியாகும். நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஏன் என்று காரணம் எழுப்பும் திறனை விட்டுவிடுவதில்லை, ஆனால் நிகழ்கின்ற அனைத்திற்கும் காரணம் கண்டுபிடிக்கும் விருப்பத்தை நாம் கண்டிப்பாக மேற்கோள்ள வேண்டும். தேவனை நம்புவதினாலும்; மற்றும் கீழ்ப்படிவதினாலுமே நாம் அவருடைய மரணத்தில் ஞானஸ்நானம் பெற்றபோது கிறிஸ்துவில் காணப்படுகின்ற புதிய தன்மையில் நாம் வரமுடியும் (காண்க ரோமர் 6:3, 4).

### நித்திய இரட்சிப்பு (5:9)

"இது நித்தியமானது எனவே இழந்துபோகக் கூடியது அல்ல" என்று கூறுவது "பரிசுத்தவான்களின் பாதுகாப்பு" அல்லது "தேவ தூஷணத்திற்கு சாத்தியமற்றது" என்கிற கல்வீனிய சித்தாந்தத்தை பாதுகாக்கும் கருத்தாகும். இது கிறிஸ்தவர் "கிருபையை விட்டு விழுந்துவிட முடியாது" என்கிற சிந்தையாகும். இரட்சிப்பானது நமக்கு இரட்சிப்பினால் நித்தியமாக கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த அற்புதமான ஆசீர்வாதத்தில் பங்கு பெறுதலை இழந்து போகக் கூடும். கடைசிவரை உண்மையுள்ளவர்களே பாதுகாக்கப்படுவார்கள் "தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேதுரு 1:5).

ஒருவர் விசுவாசத்தை இழந்துப்போகக் கூடுமா? "இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்" (1 தீமோ. 1:19) என்று பவுல் குறிப்பிட்டார். இந்த கருத்துக் கோணத்தை குறித்து ரோமர் 11:22 தெளிவான சாத்தியக்கூறை எடுத்துரைக்கிறது: "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும் உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்." கலாத்தியர் 5:4ல் வெளிப்படையாக கூறப்பட்டுள்ள சொற்றொடரை ஒருவர் எப்படி மறுக்கக் கூடும்? அங்கே, பவுல் "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" என்று கூறுகிறார். இங்கு காணப்படுகிற யூகமானது இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறவர்கள் உண்மையாகவே மனமாற்றமடையவில்லை என்று கூறுவது வெறும் யூகத்தின் அடிப்படையிலானது.

### "நீங்கள் போதகர்களாக இருக்க வேண்டும்" (5:12)

எபிரெய கிறிஸ்தவர்கள் போதிக்க வேண்டிய பொறுப்பிலிருந்தார்கள் ஏனெனில் அவர்கள் வசனத்தைக்

கேட்டிருந்தார்கள், பெற்றுக் கொண்டிருந்தார்கள், மற்றும் கீழ்ப்படிந்திருந்தார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தான் எவ்விதமாக இரட்சிக்கப்பட்டேன் என்பதைக் குறித்துக் கேட்டவைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்துகொள்ள வேண்டிய கடமை இருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள "போதகர்" என்பது முறைப்படியான போதகரைக் குறிப்பிடக்கூடியது அல்ல. இரட்சிக்கப்பட்ட அனைவரும் தாங்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த அறிவை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும். ஒரு கிறிஸ்தவர் தன்னுடைய விசாரிக்கும் நண்பருக்கு சில வசனங்களை எடுத்துக் கூற தகுதியுள்ளவராக இருக்க வேண்டும். ஒருவர் கிறிஸ்தவ மூல உபதேசங்களை அடக்கி ஆள தெரியாதவராக இருப்பாரெனில், அவர் மற்றவர்களை கர்த்தருடைய அன்பிற்கும் அவருடைய வார்த்தைக்கும் மற்றவர்களை தாக்கம் செய்ய முடியாது.

**ஆவிக்குரிய பூரணமாகுதலை வளர்ப்பது எப்படி (5:14)**

எல்லா பாவத்தையும் மற்றும் பெலவீனங்களையும் மேற்கொள்ளும் உணர்ச்சி கொந்தளிப்பால் ஆவிக்குரிய வளர்ச்சி வருவது கிடையாது. "நான் மனந்திரும்பின பிறகு இதுவரை ஒருநாளும் குடித்ததில்லை" (அல்லது புகைபிடித்ததில்லை அல்லது பிறரை சபித்ததில்லை) என்று சிலர் கூறுவதைக் கேட்க முடிகிறது. அது அற்புதமானது! மனமாற்றமடைந்தபோது இப்படிச் செய்ய தீர்மானித்திருந்த நபர் தன்னுடைய பழக்கவழக்கங்களை மெச்சத்தக்க வகையில் மாற்றுவதில் வெற்றிபெற்றிருக்கலாம், ஆனால் சோதனையால் தூண்டப்படுவதும் உடனடியாக முற்றிலும் வெளியேற்றுவதும் கூடாத காரியம். அவர்களுடைய இலட்சியங்களை அடைவதற்கு அவர்கள் "நீதியின் வார்த்தையோடு" (வசனம் 13) காலமும் பயிற்சியும் பெறுவது அவசியமாக இருக்கிறது.

நம்முடைய வாழ்வில் வருகிற மாற்றங்கள் எப்போதும் நாம் கற்றவைகளாலும் நாம் செய்ய போதிக்கப்பட்டவைகளாலும் நிறைவேற்றப்படுகிறது. ஒருவர் சில செயல்கள் தவறு மற்றும் அவைகள் மனமாற்றத்திற்குட்பட்டவை என்று நம்பும்போது, அவர் அந்த பாவச்செயலாக கருதுகிறவற்றை நிறுத்த தீவிரமான செயல்களை செய்வார். நாம் போதனைகளின் பலனாக இருக்கிறோம்; இது நாம் விரும்புகிற அந்த புதிய பண்பு நம்முடைய இயல்பின் ஒரு பகுதியாக மாற வேண்டுமென்றால் அதற்கு நேரமும் முன்னேற்றமும் அவசியப்படுகிறது. பரிசுத்தவான்கள் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்திருக்க வேண்டியது அவசியமென்பதையும் நம்முடைய பரிசுத்தத்திற்காக கிரியை செய்ய வேண்டுமென்பதையும் மறந்துவிடக் கூடாது. நீங்கள் பூரணராக "இறைச்சியுண்கிற" கிறிஸ்தவர்களாக வளரும்படிக்கு தேவன் உங்களுக்கு உதவிசெய்ய ஜெபியுங்கள்.

"நான் எதையும் தவறாகக் காணவில்லை ..." என்று கூறுவது ஒருவருடைய ஆவிக்குரிய பகுத்தறிவின் குறைபாட்டை மட்டுமே வெளிப்படுத்துகிறதேயொழிய, நீதியையும் அல்லது கவனத்திலுள்ள பயிற்சிக்கிற தவறின் தன்மையை வெளிப்படுத்த முடியாது.; ஆவியில் எப்போதும் வளருகிற ஒருவர் தேவனுடைய நீதியான சட்டத்தின் தேவைகள் மற்றும் பாவிகள் மீது காட்டவேண்டிய இரக்கத்திற்கு அவசியமான எல்லைகள் ஆகிய இரண்டையும் புரிந்துகொண்டு, சர்வ வல்லவருக்கு பிரியப்படுத்தும் விதமாக வாழ்வார். இன்றைய சபைகளில் அதிகமான எண்ணிக்கையில் துர் உபதேசத்தின் ஆபத்தை அறியாத கிறிஸ்தவர்கள் இருப்பதே சபையின் இன்றைய துக்ககரமான பிரச்சனையாக இருக்கிறது.

ஒரு பிரசங்கியார் ஒரு முறை "பல கிறிஸ்தவர்கள் 'இடைப்பட்டவர்களாக'" இருக்கின்றனர் என்று கூறினார். அதாவது "அவர்கள் எகிப்திற்கும் கானானிற்கும் இடையில் இருக்கிறார்கள் - ஆபத்தான இடைத்தை விட்டுவிட்டார்கள் ஆனால் இளைப்பாறுதலுக்கான இடத்திற்கும் மற்றும் ஐசுவரியமான சுதந்திரத்திற்கும் செல்லவில்லை"[39] என்று பொருள்படுத்தினார். வெட்கப்படுத்தாத நடைமுறையில் நம்முடைய விசுவாசத்தை வைப்போம் என்றால் நாம் அந்த "இடைப்பட்டவர்" என்ற நிலையை விட்டு நாம் வெளியே வருவோம்.

---

இறுதிக் குறிப்புகள்

[1]Josephus *Wars* 4.3.6, 10. [2]James Burton Coffman, *Commentary on Hebrews* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 97-98. [3]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 97. [4]Donald A. Hagner, *Encountering the Book of Hebrews: An Exposition, Encountering Biblical Studies* (Grand Rapids, Mich.: Baker Academic, 2002), 82. [5]Thomas Hewitt, *The Epistle to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 95; Donald Guthrie, *Hebrews*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1983), 125. [6]Several sources are given in Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 (New York: Doubleday, 2001), 287. [7]பின்வருவது ஆசாரியன் தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும் பண்டைய கால ஜெபமாகும்: ஓ தேவனே, உமக்கு முன்பாக நான் பாவமும் செய்தவன், துன்மார்க்கமாய் நடந்தவன், மற்றும் அநியாயம் செய்தவனாகவும் இருக்கிறேன், நானும் என் குடும்பமும் மற்றும் ஆரோனின் பிள்ளைகளும், உம்முடைய பரிசுத்த ஜனமாக உள்ளோம். ஓ தேவனே, நானும் என் குடும்பமும் உமக்கு முன்பாக செய்த பாவங்கள், துன்மார்க்கங்கள் மற்றும் அநியாயங்களையும் மன்னித்தருளும்படி நான் வேண்டிக்கொள்கிறேன். (*Midrash Yoma* 4:2; quoted in Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* [Moberly, Mo.: Scripture Exposition Books, 1992], 73, n. 15.) This was uttered just before passing through the veil of the temple. [8]Hewitt, 96. [9]Koester, 286. [10]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 115.

[11]Josephus *Antiquities* 15.3.1; 2 Maccabees 4:7. [12]அப்போஸ்தலர் 6:1எ-ல் சபைக்கு ஊழியம் செய்யும்படிக்கு தெரிந்துகொள்ளப்பட்ட மனிதர்கள் பரிசுத்த ஆவியானவர்

வெளிப்படுத்திய தகுதிகளின் அடிப்படையில் சபையின் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். இது மறைமுகமாக நிகழ்ந்திருந்தாலும்கூட, இவர்கள் பரிசுத்த ஆவியானவர் மூலம் ஊழியம் செய்யும்படிக்கு இந்த ஏழு பேரும் ஏற்படுத்தப்பட்டனர் என்று கூற முடியும். இந்த ஏழு பேரும் "மூப்பர்கள்" என்று அழைக்கப்படாவிட்டாலும், அவர்களின் ஊழியமானது "மூப்பர்கள்," உடன் ஊழியன்," "ஊழியன்" என்று அர்த்தம் கொள்ளும் அதே வார்த்தையானது செயல்பாட்டுவினையில் விவரிக்கப்பட்டுள்ளது. [13]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 181. [14]Ibid., 15. [15]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 97. [16]"நித்தியம்" என்பதன் அர்த்தம் "இடைப்பட்ட காலகட்டம்" எனலாம், ஆரோனின் ஆசாரியத்துவம் மோசேயின் யுகம் மற்றும் நியாயப்பிரமாண ஆளுகை வரை நீடித்தது போன்று, இயேசுவின் ஆசாரியத்துவத்திற்கும் பொருந்தும். இது கிறிஸ்தவ யுகம் வரை நீளும். அதாவது அவருடைய மறுவருகையில் இது முடிவடையும் (யாத். 40:15; எண். 25:13). (Reese, 76, n. 26.) [17]Hewitt, 100-1. [18]அநேக வர்ணனையாளர்கள் சொல்வது என்னவென்றால் இயேசுவின் ஜெபம் தோட்டத்தில் கேட்கப்படவில்லை என்ற கூற்று இருந்தாலும்கூட, மரணத்திலிருந்து இரட்சிக்கிறவர் மூலம் அவர் ஜெபம் கேட்கப்பட்டது. [19]James Thompson, *The Letter to the Hebrews*, The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1971), 77. [20]Brown, 100.

[21]அவருடைய பயத்தை சாந்தப்படுத்துவது, குறிப்பிட்ட காலத்திற்கு முன் தோட்டத்தில் மரிப்பதிலிருந்து காத்தல், உயிர்த்தெழுதல் வழியாக அவரை மரணத்திலிருந்து விடுவித்தலைச் சேர்த்து அவரை விடுவிப்பதற்கு, கிறிஸ்துவின் ஜெபத்திற்கு தேவன் பதிலளிப்பதற்கு பல வழிகள் உண்டு என்று நெயில் ஆர் லைட்ஃபூட் சொல்கிறார். (Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* [Grand Rapids, Mich.: Baker Book House, 1976], 109, 114-15.) James T. Draper, Jr., told it best: "God did hear his prayer. God did respond to his prayer" (Draper, 123). [22]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 65. [23]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 126. [24]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 137. [25]W. H. Griffith Thomas, *Hebrews: A Devotional Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1975), 64. [26]Reese, 78, n. 33. [27]Lightfoot, 110. [28]Brown, 101. [29]Guthrie, 131. [30]Thompson, 78.

[31]Koester, 290. [32]Thompson, 79. [33]Brown, 102. [34]Arthur W. Pink, *An Exposition of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 262. [35]The perfect tense of "have come to" indicates "the abiding result of a past act" (Brown, 105). [36]Lightfoot, 112. [37]Guthrie, 125-26. [38]J. Harry Cotton, "The Epistle to the Hebrews: Exposition," in *The Interpreter's Bible*, ed. George Arthur Buttrick (Nashville: Abingdon Press, 1955), 11:641. [39]Warren W. Wiersbe, *Be Confident: An Expository Study of the Epistle to the Hebrews* (Wheaton, Ill.: Victor Books, 1982), 61.